# உதயன்

விலை ரூபா 6-00

சுபர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 25 செவ்வாய்க்கிழமை(09-03-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 87


# அமெ. அரசு மீது புலிகள் தொடுத்த வழக்கின் விசாரணைகள் பூர்த்தி!

## தீர்ப்பு வழங்குவது ஒத்திவைப்பு

லண்டன், மார்ச் 9

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாதக் குழுக்களின் பட்டியலில் சேர்த்து அமெரிக்க அரசு விடுத்த அறிவிப்பை ஆட்சேபித்து அந்த அமைப்பின் சார்பில் அமெரிக்காவின் கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன. தீர்ப்பு வழங்குவதை நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

நீதியரசர்கள் ஸ்ரீபன் எவ். வில்லியம்ஸ் றேமன் ரண்டோல்வ், ஜேம்ஸ் எல். பக்ளி ஆகியோரர் முன்னிலையில் இந்த வழக்கு கடந்த வெள்ளியன்று விசாரிக்கப்பட்டது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோன்சனின் காலத்தில் அமெரிக்க சட்டமா அதிபராக இருந்த ரம்சி கிளார்க் புலிகளுக்காக வாதிட்டார்.

'நீதி சார்பான விவகாரங்களில் அரசியல் ரீதியாக முடிவெடுப்பதற்கு அரசியல்வாதிகளை அனுமதிக்கக்கூடாது'. "பழைமையான நாகரிகத்தையும் கலாசாரத்தையும் கொண்ட... சுயநிர்ணய உரிமைக்காகவும் இறைமைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொருள்களை ஏற்றிவந்த இந்தியப்படகு சிக்கியது

### ஒன்பது பேர் கைது!

கொழும்பு, மார்ச் 9

தமிழ்நாட்டிலிருந்து டீசல், பெற்றோல், பற்றரி உட்பட பல பொருள்களை ஏற்றி வந்ததாக் கூறப்படும் இந்தியப்படகு ஒன்றை இலங்கைக் கடற்படையினர் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப்படகில் இருந்த மூன்று இந்திய மீனவர்கள் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டதுடன் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

படகில் இருந்து ஆயிரத்து 650 லீற்றர் டீசல்; ஆயிரத்து 200 லீற்றர் பெற்றோல், 225 லீற்றர் மண்ணெண்ணெய் 80 பற்றரிகள் என்பன கைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### "போர்க் கோஷம்" நடவடிக்கை:

## கைப்பற்றிய பகுதிகளில் படையினர் நிலைகளைப் பலப்படுத்துகின்றனர்

வவுனியா, மார்ச் 9

வன்னியில் கடந்த சனியன்று மேற்கொள்ளப்பட்ட "போர்க் கோஷம்" என்ற புதிய படை நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட 535 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில் தமது நிலைகளை நிறுவிப் பலப்படுத்தும் பணியில் படையினர் நேற்று முழுநாளும் ஈடுபட்டதாக வவுனியா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வன்னிவிளாங்குளம், மூன்று முறிப்பு, இரணை இலுப்பைக்குளம், பூவரசங்குளம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய இப்பிரதேசத்தில் தேடுதலில் ஈடுபட்ட படையினர் பல இடங்களில் இருந்து ஆயுதங்களையும் வெடிகுண்டுகளையும் மீட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இராணுவ நடவடிக்கை முடிவடைந்து விட்டதா என்பதைப் பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்யவில்லை என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

(ஐ-6-164 க)

## பூவரசங்குளம்-மூன்றுமுறிப்பு பகுதிக்கு மின்சாரம் வழங்க உடன் ஏற்பாடு!

### பொதுமக்களுக்கு விசேட அ. அட்டைகள்

வவுனியா, மார்ச் 9

வன்னியில் "போர்க் கோஷம்" இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் தங்கி உள்ள மக்களுக்கு விசேட அடையாள அட்டைகளையும் புதிய குடும்ப அட்டைகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். விசேட அடையாள அட்டைகள் வழங்குவதற்காக பொதுமக்களை புகைப்படம் எடுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

பூவரசங்குளத்தில் இருந்து மூன்றுமுறிப்புவரை மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும் அப்பகுதி வீதிகளை உடனடியாகத் திருத்துவதற்கும் வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் என்.கே. ஒபடகே அனுமதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடையை நீக்குமாறு கோரிக்கை

### மதுரை மாநாட்டில்

சென்னை, மார்ச் 9

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது விதித்துள்ள தடையை மத்திய அரசு நீக்கவேண்டும்.

மதுரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பி. நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் ஈழத் தமிழர் ஆதரவு அமைப்புக்களின் பிரதிநிதிகள், அனுதாபிகள், தமிழக அரசியல்வாதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஈழத்தமிழர்களின் இன்றைய நிலை குறித்து மாநாட்டில் ஆராயப்பட்டது.

தமிழக சிறைகளில் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழியில் கிரனேற் வெடிப்பு?

யாழ்ப்பாணம், மார்ச் 9

நாவற்குழிப் பகுதியிலுள்ள சோதனை நிலையம் ஒன்றுக்குச் சமீபமாக நேற்று நண்பகல் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

படையினரின் கிரனேட் ஒன்று தவறுதலாக வெடித்ததால் இந்தச் சம்பவம் ஏற்பட்டதாக் கூறப்பட்ட போதிலும் அத்தகவல் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

[10 ஆம் பக்கம் பார்க்க]

### புதிய படை நடவடிக்கை:

## மக்கள் அவலம் குறித்து ஐ.நா. செயலருக்கு மகஜர்

வவுனியா, மார்ச் 9

ஸ்ரீலங்காபடையினர் மேற்கொண்ட 'போர்க்கோஷம்' இராணுவ நடவடிக்கையால் அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்கள் படும் துன்பங்கள், அவலங்கள் மற்றும் அவர்களின் உடைமை அழிவுகள் என்பன குறித்து வன்னி மாவட்ட பிரஜைகள் குழு ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

ஐ. நா. செயலாளருக்கு முகவரியிடப்பட்ட அந்த மகஜர் மல்லாவியில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக

[10 ஆம் பக்கம் பார்க்க]

## கைப்பற்றிய பகுதிகளுக்கு அரச அதிகாரிகள் குழு

வவுனியா, மார்ச் 9

"போர்க் கோஷம்" படை நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களுக்கு நேற்று அரச அதிகாரிகள் குழு ஒன்று விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டது.

வவுனியா மேலதிக அரச அதிபர் எஸ். ரகுநாதபிள்ளை தலைமையில் சென்ற இக்குழுவில் பிரதேச செயலர் இமெல்டா கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்பாரதி ஆனந்தன் ஆகியோரும் அடங்கியிருந்தனர். இவர்கள் அங்கு நிலைமைகளை அவதானித்துவிட்டு நேற்றிரவே வவுனியா திரும்பினர்.

இப் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கான உலர் உணவுப் பொருள்களின் விநியோகம் மற்றும் இப்பகுதியில் சிவில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக்கு இலக்காகி மூதாட்டி மரணம்

### சரசாலை பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

சாவகச்சேரி கெருடாவில் —சரசாலைப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்ட இச் சடலம் அடையாளம் காண்பதற்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சரசாலைப் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே மோதல் இடம்பெற்றதாகவும் —

அந்த மோதலின் இடையில் சிக்குண்டே இந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

ROTARACT CLUB

# கண்ணீர் அஞ்சலி

எமது கழக அங்கத்தவரும்
முன்னாள் செயலாளருமான
Rtr. T. ஆரணி அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி
**மகேஸ்வரி தம்பிராசா**

அவர்களின் மறைவையிட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

— சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்

(சி/6721)



# தென்மராட்சி உயர் கல்வி நிலையம்

சாவகச்சேரி

G. A. Q. (யாழ்ப்பாணம், பேராதனை)
2000ஆம் ஆண்டு பிரிவு ஆரம்பம்
காலம்: 12 — 03 — 1999
பாடம்: தமிழ் 3 மணி (புதிய நேரம்)

ஏனைய பாடங்களுக்கு நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறவும்.

(63714) — நிர்வாகி.


# மரண அறிவித்தல்கள்

## முத்துச்சாமி சின்னம்மா

அரியாலை, ஆனந்தன் வடலி வீதியைச் சேர்ந்த செவ்வந்தி என்று அன்பாக அழைக்கப்படும் முத்துச்சாமி சின்னம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னையா—பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்துச்சாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசேஸ்வரி, சகுந்தலாதேவி, இந்திராணி, சூரி என்று அன்பாக அழைக்கப்படும் ஜெகதீசன், காலஞ்சென்ற நாகயோகேஸ்வரி, இராசலட்சுமி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற இராசம்மா, ஐயாத்துரை ஆகியோரின் சகோதரியும், செச்வரத்தினம், ஸ்ரீ தர்ம மூர்த்தி(கனடா), மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-03-99) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் இலக்கம் 114, ஆனந்தன்வடலி வீதி, அரியாலையில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மு. ஜெகதீசன் (சூரி)
(மகன்)

114, ஆனந்தன்வடலி வீதி,
அரியாலை.

(63723)

## யோண்பிள்ளை பாக்கியநாதர்

(சில்லாலை)

சில்லாலையைச் சேர்ந்த யோண்பிள்ளை பாக்கியநாதர் அவர்கள் 8-3-99 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பெர்ணதேத்தம்மாவின் (பொன்னம்மா) அன்புக் கணவரும் சேனாதிராஜா (பிரான்ஸ்), செகராசா (சிலாபம்), தருமராஜா (தபால் ஊழியர், பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற வண. அருட்திரு. யோஸ்சிங்கராயர், சவரிமுத்து, இறகரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (9-3-99) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 30 மணியளவில் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
பா. இ. தர்மராஜா

சில்லாலை.
பண்டத்தரிப்பு.

(63717)

## திருமதி பாறுவதிப்பிள்ளை பொன்னுத்துரை

திருமதி பாறுவதிப்பிள்ளை பொன்னுத்துரை 04-03-99 இல் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09-03-99) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் 10-30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாணிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொன்னுத்துரை
(வேலாயுதபிள்ளை — கணவன்)

சுதுமலை மேற்கு.
மானிப்பாய்.

(63719)

# 203 குடும்பங்கள் வருகை

வன்னிப் பகுதியிலிருந்து யாழ். குடாக்கடல் ஊடாகக் கடந்த பெப்ரவரி மாதத்தில் 203 குடும்பங்களைச் சேர்ந்த 435 பேர் யாழ்ப்பாணத்திற்கு திரும்பியுள்ளதாக யாழ். செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் குருநகர் இடைத் தங்கல் முகாமில் தங்க வைக கப்பட்டு விசாரணைகளின் பின்னர் தமது சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதிக்கப் பட்டனர். (ஐ-5)

# கூட்டம்

பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதி சனசமூக நிலையங்களின் தலைவர்கள் செயலாளர்களுக்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமைபிற் பகல் 3 மணிக்கு புலோலி பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு உள்ளூராட்சித் திணைக்களத்தின் பருத்தித்துறை பிரதேச சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி பரமேஸ்வரி பொன்னையா அறிவித்துள்ளார். (ஐ-173)

# 3 சடலங்களும் அரச செலவில் அடக்கம்

ஆனையிறவுப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்ததாகத் தெரிவித்து கடந்த 4 ஆம் திகதி பலைப் பொலிஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்ட மூன்று இளம் பெண்களின் சடலங்களும் அடையாளம் காணப்படாததை அடுத்து நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

நான்கு நாள்களாக சடலங்கள் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி

இன்று முதல்
M. G. R. - லதா
நடித்த
உரிமைக் குரல்
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
T. P. No. 070-212223

(63680)



## நாகம்ஸ்

சுன்னாகம்.

கார்த்திக் - ரம்பா
கவுண்டமணி
நடித்த
உள்ளத்தை அள்ளித்தா
புதிய நேரப்படி காட்சிகள்
11-00, 2-30
10 - 03 - 99 முதல்
விஜய் நடித்த
செந்தூரபாண்டி

(63681)



## ராஜா

யாழ்ப்பாணம்.

கார்த்திக் - தேவயானி
ரசிகா, அஞ்சு அரவிந்த்
ஜனகராஜ், மணிவண்ணன்
மற்றும் பலர் நடித்த
Ⓤ உதவிக்கு வரலாமா
இன்று காட்சிகள்
10-30, 2-30

(சி/6663)


# ஆணைக்குழு பிரதிநிதிகள் படைஅதிகாரி சந்திப்பு

வடமராட்சி மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரிகளான எஸ். சிறீதரன், செல்வி கௌரி சுந்தரலிங்கம் ஆகியோர் வடமராட்சி 524 பிரிகேட் பொறுப்பதிகாரி கேணல் சந்திரவன்சாவை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்கள். நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது பொது மக்கள் தமது முறைப்பாடுகளைத் தயக்கம் எதுவுமின்றித் தமக்குத் தெரிவித்தால் தாம் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்று கேணல் சந்திரவன்சா தெரிவித்தார்.

இந்த விடயத்தில் பொது மக்களின் ஒத்துழைப்பு தமக்குத்தேவை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-5-173)

# உயர் தொழில் நுட்ப கற்கைகளுக்கு 365 பேர்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். உயர் தேசிய தொழில் நுட்ப நிறுவனத்தில் இந்த ஆண்டு பல்வேறு கற்கை நெறிகளுக்கும் 365 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது கடந்த வருடங்களை விட உயர்வானது என உயர் தேசிய தொழில் நுட்ப நிறுவனத்தின்கற்கைநெறிஇணைப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை—

மேற்படி நிறுவனத்தில் நிலவும் விரிவுரையாளர்களுக்கான பற்றாக்குறையை நீக்கும் வகையில் 101 பகுதி நேர விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தென்மராட்சியில்

# ஆறு பாடசாலைகளுக்கு கணனிகள் கிடைத்தன

தென்மராட்சி, மார்ச் 9

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆறு பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவை கொள்வனவு செய்யப்பட்டு வலய அலுவலகத்திற்கு வழங்கப் பட்டுள்ளன.

இவை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசாமிமகாவித்தியாலயம், நாவற்குழி மகா வித்தியாலயம், பளை மத்திய கல்லூரி ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் கல்விமேம்பாட்டுக்காக கணனிகள் வழங்கப்பட்ட போதிலும் அவற்றினை இயக்கக் கூடிய ஜெனரேற்றர் வசதிகள் இல்லாததால் அவற்றைப்பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. (ஐ-117)

# இல்ல விளையாட்டுப் போட்டி

நெல்லியடி, மார்ச் 9

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கே. ஞானசேகரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மேற்படி பாடசாலையின் ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் ஜே. தேவராஜா கலந்து கொள்வார். (க-109)

★ ★ ★

குருநகர், மார்ச் 9

யாழ். திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கிலப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பி. ப. 1-30 மணிக்கு அதிபர் அருட் சகோதரி யோலன்ட் மத்தியாஸ் தலைமையில் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவத்துறைத் தலைவர் எம். நடராஜசுந்தரமும் சிறப்பு விருந்தினராக அருட்திரு. மைக்கல்சௌந்தரநாயகம் அடிகளாரும் கலந்து கொள்ள உள்ளார்கள். (ஐ-51)

# பதவி உயர்வு

வலி. தென்மேற்கு, மார்ச் 9

பதினைந்து வருடங்களாக அராலி வடக்கு உப - தபால் அதிபராகக் கடமையாற்றிய திருமதி தம்பித்துரை தவநாயகி தபால் அதிபராகப் பதவியுயர்வு பெற்று கொழும்பு சென்றுள்ளார்.

இவரதுஇடத்திற்குப் புதிய உப-தபால் அதிபராக செல்வி சபாநாயகம் தீபசாந்தினி கடந்த 25 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-க-185)

# சுகாதார தொண்டர்களுக்கு பயிற்சி

வடமராட்சி, மார்ச் 9

வடமராட்சிப் பகுதியில் சேவையாற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்ட 33 சுகாதாரத் தொண்டர்களுக்கு நேற்று முதல் ஆரம்ப சுகாதாரப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தப்பயிற்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை வழங்கப்படும்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல சேவையாளர்களால் இப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. (ஐ-173)


கோப்பாய் ஆசிரிய கலாசாலை
மதிலக விளையாட்டு மன்றம்
நடத்திய நண்பர்களுக்கான அதிர்ஷ்ட
## இலாப சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு 2730
2ஆம் பரிசு 3649
3ஆம் பரிசு 3825

ஆறுதல் பரிசுகள்: 2718, 1206, 0570, 3984, 1073, 3399, 3632, 1966, 0836, 0165.

(63720)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீஹாரில் ஜனாதிபதி ஆட்சியை ரத்துச் செய்ய மத்திய அரசு முடிவு!

## மாநிலங்கள் அவையில் ஆதரவுபெறமுடியாத நிலைமை

புதுடில்லி, மார்ச் 9

பீஹாரில் ஜனாதிபதி ஆட்சியை ரத்துச் செய்வது என்று அரசு முடிவு செய்துள்ளது.

கீழ்ச்சபையான மக்களவையின் உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை கூடிய மத்திய அமைச்சரவை இது தொடர்பான முடிவை எடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

பீஹாரில் ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரப்பட்டமை சரியானது என்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானம் நேற்று மேல் அவையான மாநிலங்கள் அவையில் கொண்டு வரப்படவிருந்தது.

மாநிலங்கள் அவையில் இந்தத் தீர்மானம் தோல்வியடையும் நிலை உருவாகியதை அடுத்து பிரதமர் வாஜ்பாய் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடிக் காங்கிரஸின் ஆதரவைக் கோரினார்.

காங்கிரஸின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்றும்—

இந்தத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்போம் என்றும்— சோனியா காந்தி தெளிவுபடக் கூறிவிட்டார்.

இதன்பின்னர் ஜனாதிபதி ஆட்சியை நீடிப்பதா? அல்லது ரத்துச் செய்வதா? என்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த வாஜ்பாய் அரசு நேற்றுக் கூடி ஜனாதிபதி ஆட்சியை ரத்துச் செய்வதென முடிவு செய்து ஒருவாறு தப்பிப் பிழைத்துக்கொண்டது.

(இ—3)

## நிலச்சுரங்க விபத்தில் 10 பேர் பலி

கராச்சி, மார்ச் 9

பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் உள்ள நிலச்சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்து ஒன்றில் 10பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனி இரவு சுரங்கத்தில் வெடி விபத்து ஒன்று ஏற்பட்டதாகவும்—

அச்சமயம் அங்கு பணிபுரிந்து கொண்டிருந்த 10 தொழிலாளர்கள் உயிரிழந்ததாகவும் — அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இந்த விபத்துத் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(இ-3)

### அணு ஆற்றல் தொடர்பான

## அமெரிக்க ரகசியங்களை சீனா திருடியதாம்!

வாஷிங்ரன், மார்ச் 9

அமெரிக்காவின் அணு ஆற்றல் தொடர்பான ரகசியங்களை சீனா திருடியுள்ளதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை குற்றஞ்சாட்டியுள்ளது.

1980 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவின் இந்த ரகசியங்களை சீனா திருடி பல குண்டுகளைச் சுமந்து செல்லக் கூடிய ஏவுகணைகள் மற்றும் சிறுசிறு ஆயுதங்களைத் தயாரித்துள்ளது என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லை என சீனா மறுத்துள்ளது.

ஆனால் இது தொடர்பாக விசாரணைகள் நடைபெறுவதாக அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

(இ-3)

## இந்தோனேசியாவில் எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டம்

இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவாப் பகுதியில் இடம்பெற்று வரும் கலவரங்களை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததை ஆட்சேபித்து அந்த நாட்டு எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தின.

இந்தோனேசிய ஜனநாயக் கட்சித் தலைவியும் முன்னாள் அதிபர் சுகர்ணோவின் மகளுமான மேகவதி சுவர்ணபுத்ரி தலைமையில் நடந்த இந்தப் பேரணியில் 40 ஆயிரம் பேர் பங்குபற்றினர்.

இன, மத வேறுபாடின்றி அரசு செயற்படவேண்டும் என்றும் —

கிழக்கு ஜாவாவில் இடம்பெறும் இனக்கலவரங்கள் நிறுத்தப்படாமைக்கானதார் மீகப் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் — அவர் பேரணியில் பேசுகையில் கூறினார்.

## கெமர்ரூஜ் இராணுவத் தலைவர் கைதானார்!

நொம்பென், மார்ச் 9

கம்போடியாவில் நேற்று முன்தினம் கெமர்ரூஜ் அமைப்பின் இராணுவத்தலைவர் தாமொக் படையினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச நீதிமன்றத்தில் அவர் விசாரிக்கப்பட மாட்டார் என்றும்—

உள்ளூர் நீதிமன்றம் ஒன்றிலேயே அவர் விசாரிக்கப்படுவார் என்றும்— கம்போடிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இனப்படுகொலை புரிந்ததாக அவர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன

''கம்போடியா ஓர் இறைமையுள்ள நாடு அதற்கெனச் சொந்தமான சட்டங்களும், நீதிவிசாரணை நெறிகளும் உள்ளன'' என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆதலார் கெமர்ரூஜ் இராணுவத் தலைவர் உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படுவார்.

கம்போடியச் சட்டத்தின்படி அவருக்கு ஆகக்கூடிய தண்டனையாக ஆயுள்காலச் சிறைத்தண்டனையே விதிக்கப்படும்.

அந்த நாட்டில் மரணதண்டனை விதிக்க சட்டம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கெமர்ரூஜ் இராணுவத் தலைவர் கைது செய்யப்பட்டதை அமெரிக்கா வரவேற்றுள்ளது. (இ-3)

வல்வெட்டித்துறை

**நகராட்சி மன்றம்**

ஒப்பந்த அடிப்படையில்

**பதவி வெற்றிடங்களை நிரப்புதல்**

கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்கான வெற்றிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யும் பொருட்டு குறித்த தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிகள்:

1) சுகாதாரத் தொழிலாளி
2) சுகாதார வேலையாள்
3) அலுவலகக் காவலாளி
4) உழவு இயந்திர சாரதி

தகைமைகள்:

1) குறைந்த பட்சம் 5 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2) 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3) வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும், தற்போது இவ் அலுவலகத்தில் அமைய/பதில் அடிப்படையில் கடமை புரிபவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
4) உழவு இயந்திர சாரதி பதவிக்குரிய விண்ணப்பதாரர்கள் 8 ஆம் வகுப்பில் சித்தியடைந்திருப்பதுடன், கனரக வாகனம் செலுத்துவதற்கான உத்தரவுப் பத்திரமும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்வதுடன் பூரணப்படுத்திய விண்ணப்பங்களை 15 — 03 — 1999 ஆம் திகதியன்றோ அல்லது முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக தலைவர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக கடமை நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

சு. சந்திரசேகரம்,
தலைவர்
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
02 — 03 — 1999 [சி/6720]

## துருக்கிப் பிரதமர் குர்டிஷ் பகுதிக்கு விஜயம்

### கெரில்லாக்கள் எச்சரிக்கை

இஸ்தான்புல், மார்ச் 9

துருக்கிப் பிரதமரைச் சந்திப்பவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்று குர்டிஷ் கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

துருக்கியில் குர்டிஷ் மக்கள் வாழும் தென்கிழக்குப் பகுதிக்கு துருக்கிப் பிரதமர் நேற்று விஜயம் செய்யத் திட்டமிட்டிருந்ததை அடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது

குர்டிஷ் கிளர்ச்சிக் குழுத் தலைவர் அப்துல்லா ஒகலன் கைதுசெய்யப்பட்ட பின்னர் குர்டிஷ் பிரதேசத்துக்குச் செல்லும் முதலாவது உயர்மட்டத் தலைவர் இவராவார்.

குர்டிஷ் நகரமான தியார்பாக்கிக்குச் செல்லும் துருக்கிப் பிரதமர் அந்தப் பிராந்தியத்தில் பொருளாதார முதலீடு தொடர்பாக ஆராய்வார்.

உள்ளூர் வர்த்தகர்கள் மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்தித்து அவர் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசியல் மாற்றங்கள் தொடர்பாக அவர் கருத்து வெளியிடமாட்டார் எனக் கூறப்படுகின்றது.

(இ-3)

## பங்களாதேஷில் குண்டு வெடிப்பு 7 பேர் பலி

பங்களாதேஷின் தென் பகுதியில் கிஷோர் நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு ஒன்றில் ஏழு பேர் உயிரிழந்தனர் 20 பேர்காயமடைந்தனர்

அங்கு நள்ளிரவு நடந்த

உலக அரங்கில்

இசை நிகழ்ச்சி ஒன்றிலேயே இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

இரு குண்டுகள் வெடித்திருக்கலாம் என பொலீஸார் நம்புகின்றனர்,

இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு எவரும் இதுவரை உரிமைகோரவில்லை (இ-3)

### வாஜ்பாய் அரசுக்கான

# ஆதரவை விலக்கப் போவதாக ரூபாக்அப்துல்லா எச்சரிக்கை

புதுடில்லி, மார்ச், 9

வாஜ்பாய் அரசுக்கு அளித்துவரும் ஆதரவை விலக்கப்போவதாகக் காஷ்மீர் தேசிய மாநாட்டுக்கட்சி தெரிவித்துள்ளது.

தேசிய மாநாட்டுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் முதலமைச்சர் பாரூக் அப்துல்லா தலைமையில் நடைபெற்ற சமயம் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

காஷ்மீர் அரசுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்றும்—

போதிய நிதியை மத்திய அரசு ஒதுக்கவில்லை என்றும்—

மற்ற மாநிலங்களை விடக் கூடுதல் நிதி தமது மாநிலத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் - அந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

போதிய நிதி வழங்காது விட்டால் மத்திய அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக பாரூக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

இந்த முடிவு உடனடியாக மேற்கொள்ளப்படமாட்டாது என்றும்—

தேவை ஏற்படின் அந்த முடிவு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

(இ—3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில், கச்சேரிக்கு அண்மையில் சுமார் 5 பரப்பு விஸ்தீரணம் உடைய காணியில் உள்கு பெரிய வீடு ஒன்றும், சிறிய வீடு ஒன்றும் விற்பனைக்கு உண்டு; தொடர்பு: ச. நரேந்திரன், 67/1, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு சனி, ஞாயிறு தினங்களில் அல்லது கிழமை நாள்களில் மாலை 5மணிக்குப்பின்னர் தொடர்பு கொள்ளலாம்.

[63695]

### திருத்துதல்

சகல கமரா வகைகளும், எலக்ரோனிக் பிளாஷ், மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கபபடும். தொடர்பு: சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி), கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில். (63605)

## தே ங்காய் திருட்டு

வடமராட்சி, மார்ச் 9

புலோலிப் பகுதியில் தேங்காய்த் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

இப்பகுதியிலுள்ள வீடுகளில் உள்ள தென்னை மரங்களிலிருந்து இரவு வேளைகளில் இனந்தெரியாதோர் தேங்காய்களை திருடுகின்றனர்.

(இ-173)

## அஞ்சலி நிகழ்வு

உரும்பிராய், மார்ச் 9

கூட்டுறவாளரும் பொது நல சேவையாளருமாகிய உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த காலம் சென்ற சோமசுந்தரம் குகதாசனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு, நீர்வேலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் 29 ஆம்கிளை நிலையத்தில் இடம் பெற்றது.

செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கிளைக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகாண்டனர்.

(ஐ-145)

## இராசவள்ளி அறுவடை

புன்னாலைக்சட்டுவன்.

மார்ச் 9

புன்னாலைக் கட்டுவன், ஈவினைப் பகுதிகளில் இராசவள்ளிக் கிழங்கு அறுவடை செய்யப்படுகின்றது

இந்த வருடம் நன்றாக இராசவள்ளிக்கிழங்கு விளைந்துள்ளதால் இப்பகுதி விவசாயிகள் பெரும் இலாபம் அடைந்துள்ளனர்.

ஒரு கிலோ கிழங்கு 20ரூபா முதல 25 ரூபாவரை சந்தையில் விற்பனை செய்யப்படுவது குறி பிடத்தக்கது

(இ-133)

## மதகு திருத்தும் வேலைகள்

வடமராட்சி, மார்ச் 9

வல்லை உப்புறோட் சந்திக்கும் புறாப்பொறுக்கிக்கும் இடையில் உள்ள மதகைத் திருத்தும் வேலைகள் பல மாதங்களாகியும் இன்னமும் பூர்த்தியடையவில்லை.

பருத்தித்துறை — யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள இந்த மதகை திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பல மாதங்களாகியும் திருத்த வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன.

[இ-173]


## G. A. Q. 99/2000
## வெளிவாரி பேராதனை

- மேற்குறிப்பிட்ட பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- பல்கலைக்கழக பதிவுக்குரிய விண்ணப்பங்களை எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
- இதற்குரிய பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும்.
- விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விவரங்களுக்கு:

S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி,**
ஆரிய குளம் சந்தி, யாழ்.

(63712)


## ஆசிரியர் கலாசாலைகளில் விரிவுரையாளர் பதவி

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் விரிவுரையாளர் பதவிக்குப் பொருத்தமானவர்களை நியமிக்கும் பொருட்டு ஆசிரிய சேவையில் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சுயவிவரத்துடன் இணைக்கப்பட்ட விண்ணப்பங்கள் தற்போது கடமையாற்றும் பாடசாலை அதிபரூடாக குறித்த ஆசிரிய கலாசலை அதிபர்களுக்கு 99 - 03 - 19 ஆம்திகதிக்குப் பிந்தாமல் அனுப்பப்பட வேண்டும்.

இந்நியமனங்கள் இணைப்பு (Secondment) அடிப்படையிலேயே செய்யப்படவுள்ளன. நியமனம் பெறும் வேட்பாளர்கள் ஆசிரிய சேவையில் பெறும் சம்பளத்தையே தொடர்ந்தும் பெறுவர். மேலதிக ஊதியமோ, படிகளோ வழங்கப்படமாட்டா.

**வெற்றிடங்கள்:**

| பாடநெறி | | கலாசாலை |
|---|---|---|
| கைவினை | — | பலாலி |
| ஆரப்பக்கல்வி | — | கோப்பாய் |
| வர்த்தகம் | — | பலாலி |
| ஆங்கிலம் | — | பலாலி |
| தமிழ் (சிறப்பு) | — | கோப்பாய் |
| விவசாயம் | — | பலாலி |
| கிறிஸ்தவம் (றோ. க) | — | பலாலி |
| உடற்கல்வி | — | பலாலி கோப்பாய் |

சோ. பத்மநாதன்
அதிபர். பலாலி
ஆசிரிய கலாசாலை.

மு. பரஞ்சோதி
அதிபர். கோப்பாய்
ஆசிரிய கலாசாலை.

(63707)

## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை

(நெல்லியடி, உடுப்பிட்டி
உப - அலுவலகங்கள்)

1987 ஆம் ஆண்டின் 15 ஆவது இலக்க
பிரதே சபைகள் கூட்டம்

## ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1999 ஆம் ஆண்டிற்கான ஆதனவரிக்கான மதிப்பீடும், ஆதனவரி அறவீட்டு விகிதமும் சென்றாண்டுள்ளவாறே மாற்றமின்றி இருக்கும். 1999ஆம் ஆண்டு முழுவதற்கும் உரிய வரித்தொகையை ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும். 1 ஆம, 2 ஆம், 3 ஆம், 4 ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணங்களை முறையே ஜனவரி 31. ஏப்ரல் 30, யூலை 31, ஒக்ரோபர் 31-க்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் கந்தாயங்களுக்கான வரிமுறையே 31 - 03 - 99, 30 - 06 - 99, 30 - 09 - 99, 31 - 12 - 99 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தத் தவறுமிடத்து, குடியிருப்பு ஆதனங்கள் மீது பற்றாணைக் கட்டணமாக 15%மும் வியாபார நோக்கத்திற்குப் பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20 % மும் அறவிடப்படும்.

ஆதனவரி நிலுவை சம்பந்தமாக தனிப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்படமாட்டாது. ஆதன உரிமையாளர்களும் அவர்கள் இல்லாதவிடத்து வாடகைக் குடியிருப்பாளர்களும் சம்பந்தப்பட்ட உபஅலுவலகத்துடன் தொடர்பு கொண்டு நிலுவைகளைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

[செல்லையா. சுந்தரமூர்த்தி]
தலைவர்,
வடமராட்சி தெற்கு, மேற்கு
பிரதேச சபை,
கரவெட்டி.

24 - 02 - 1999 [சி/6717]


ALL PURPOSE MULTI DIRECTIONAL
## KOBE-52
TV/RADIO ANTENNA



பொருத்துவதற்கு இலகுவானது

- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junction,
Colombo 4. Tel : 589992
AVAILABLE ISLANDWIDE

[சி/6492[

## B. M. C. சிமெந்து

ஜப்பான் தயாரிப்பான B. M. C. சிமெந்து விற்பனைக்கான தென்மராட்சிப் பிரிவு முகவராக நியமிக்கப்பட்டுள்ளோம்

மொத்தமாகவும். சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபா 525.00

## லக்ஸ்மி ரேடேர்ஸ்

கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி/ 6718)


## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியை
செல்வி து. விமலாதேவி
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சிவக்கொழுந்து துரைராஜசிங்கம்

அவர்களின் பிரிவால் துயர் அடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர். ஆசிரியர், மாணவர்கள்.
யா/ திருநெல்வேலி இ. த. க. பாடசாலை.

[63710]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### பொன்னையா நாகம்மா

தோற்றம் 21–01–1928 மறைவு 07–02–1999

அன்பு உள்ளம் கொண்டு என்னைவளர்த்ததாயே! பெரியம்மா, அன்புக் கதைகள் கூறி ஆசைகள் பல ஊட்டி என்னை கண்ணீர் சிந்த வைத்துவிட்டு எங்கு சென்றாயோ!

என் பிள்ளைகள் நாகம்மம்மா, பாட்டி, அம்மம்மா என்று கூறி வந்த வேளையிலும் அன்பு மொழி கூறி ஆதரித்தாயே!

எப் பிறப்பில் காண்போம் இனி!

உன் ஆத்மா சாந்தியடைய என்றும் தெல்லிநகர் துர்க்கை அம்மனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மருமகன், பேரமகன்,
பேரப்பிள்ளைகள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(63704)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரனேட் வீச்சில் முதியவர் பலியானது தொடர்பாக ராஸிக் உறுப்பினர் கைது

## தடயப் பொருள்களும் சிக்கின

மட்டக்களப்பு, மார்ச் 9

மட்டக்களப்பு அதிஉயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் முதியவர் ஒருவர் கிரனேட் வீச்சுக்கு இலக்காகி மரண மான சம்பவம் தொடர்பாக ராஸிக்குழு உறுப்பினர் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்,

கனகசூரியர் இராசதுரை என்ற அந்த முதியவரின் மரண விசாரணையை நடத்திய மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் ஜே. விஸ்வநாதன் விடுத்த உத்தரவை அடுத்தே ராஸிக்குழுவின் உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மரண விசாரணையின் போது இறந்தவரின் மகன் சாட்சியம் அளிக்கையில் என்னையும், எனது தந்தையையும் கொலை செய்யப் போவதாக ராஸிக் குழுவின் உறுப்பினரான அன்ரன் என அழைக்கப்படும் அருள் நாயகம் ஜெயராசா மிரட்டி வந்தார்.

அவர் தொடர்பாக இராணுவ இணைப்பதிகாரியிடம் எனது தந்தை முறைப்பாடு செய்ததையடுத்தே இந்த மிரட்டல் விடுக்கப்பட்டு வந்தது— என்று தெரிவித்தார்.

பிரஸ்தாப நபரைக் கைது செய்யுமாறு நீதிவான் விடுத்த உத்தரவை அடுத்து பொலீஸார் அவரைக் கைது செய்ததுடன் கொலைக்குப் பயன்படுத்தியதாகக் கருதப் படும் சில தடயப் பொருள் களையும் கைப்பற்றினர்.

மட்டக்களப்பில் ராஸிக் குழு இயக்கம் ஆரம்பித்த பின்னர் முதல் தடவையாக அந்தக் குழுவின் உறுப்பினர் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## தேங்காய் உற்பத்தி ஏப்ரலில் அதிகரிக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 9

குடாநாட்டில் பாதிக்கப் பட்டிருந்த தேங்காய் உற்பத்தி ஏப்ரல் மாதத்தில் வழமை நிலைக்கு திரும்பும் என்று தெங்கு அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கூடுதலான தென்னை மரங்கள் தறிக்கப்பட்டபோதும், அதற்குப் பதிலாக தென்னை மரங்கள் நடுகை செய்யப்படாமையே தேங்காய்த் தட்டுப் பாட்டுக்கு முக்கிய காரணம் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் 'எல் நைனோ' மற்றும் வெப்ப நிலை காரணமாக தென்னை மரங்களின் பாளைகள் கருகியதும்—

போதிய உரங்கள் இட்டுப் பயன்படுத்தாதும் — தேங்காய் தட்டுப்பாட்டுக்கு மற்றொரு காரணம் என அவர் சுட்டிக்காட்டினார்.

தற்சமயம் தென்னை மரங்களைப் பராமரிக்கும் பணி தீவிரமாக்கப்பட்டுள்ளதால் கூடுதலான பாளைகள் உருவாகி வருகின்றன என்றும் —

பெரும்பாலும் ஏப்ரல் மாத மளவில் தேங்காய் உற்பத்தி அதிகரித்துவிடும் என்றும் — அவர் தெரிவித்தார்.

அதே நேரம் — தேங்காயை முற்றிய பின்னர் பிடுங்கி விற்குமாறு அவர் ஆலோசனை கூறியுள்ளார். (இ-3)

## நிவாரணப் படிவங்கள்

கடந்த ஆண்டு ஏற்பட்ட மினி சூறாவளியினால் கோப்பாய் வடக்குப் பகுதியில் பாதிக்கப்பட்ட வாழைச் செய்கையாளருக்கு நிவாரணம் வழங்குவதற்கான படிவங்கள் வழங்கப்படவுள்ளன. (இ-72)

## தீவக வலயம் இடம் மாற்றம்

காரைநகர், மார்ச் 9

இதுவரை வேலணை சரஸ்வதி வித்தியாலயக் கட்டடத்தில் இயங்கி வந்த தீவக வலயக் கல்விப்பணிமனை கடந்த புதன்கிழமை முதல் வேலணை வங்களாவடியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது. (இ-65)

# பணம் தேடும் வித்தையை மட்டுமே பல்கலைக்கழக பட்டம் தருகின்றது

## அவை வாழ்வாங்கு வாழ உதவ வேண்டும்

பருத்தித்துறை, மார்ச் 9

பல்கலைக்கழகங்கள் இன்று பல்வேறுபட்ட பட்டங்களை வழங்கி வருகின்றன. இந்தப் பட்டங்கள் பணம் தேடும் வித்தையைக் கற்றுத் தருவதற்கு உதவுகின்றன. ஆனால் இவை மனிதனை வாழ் வாங்கு வாழ உதவும் வித்தைகளாக இல்லை. மனிதன் மனிதனாக வாழ இவை உதவ வேண்டும். மனிதத் தன்மையை வளர்க்க இப்பட்டங்கள் உதவ வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மூதவை உறுப்பினரும், படடயக் கணக்காளருமான எஸ். சோமசுந்தரம்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் தொடர்பாடலுக்கான ஆங்கிலப்பாட நெறியைப் பயின்று வெளியேறிய 161 மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இம் மாதம் முதலாம் திகதி யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத் தலைவர் மா. நடராச சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றுகையிலேயே எஸ். சோமசுந்தரம் பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:

### இயற்கையுடன் கூடி வாழவேண்டும்

ஒழுக்கம், நேரம் தவறாமை என்பன மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் முக்கியமானவை ஆகும். மக்கள் கூடி வாழப் பழகவேண்டும். விட்டுக்கொடுக்கும்மனப்பான்மை தானாக ஏற்பட வேண்டும்.

நாம் இயற்கையுடன் கூடி வாழவேண்டும். இவ்வாறான விழாக்களின் போது மாவிலை தோரணம் இருக்க வேண்டும். இது விஞ்ஞான ரீதியாக கரியமல வாயுவை நீக்க உதவும். இது எம் முன்னோர்கள் காட்டிய விஞ்ஞானக் கருத்து. புதுமையுடன், பழைமையும் சமூகக் கருத்துக்களில் இணையும் போது மனிதன் சிறப்படைகின்றான் என்றார்.

இப்படி அவர் கூறினார்.

யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதிபேராசிரியர் அ. சண்முகதாஸ் கூறியதாவது:

### சமூகத்தைத் தேடி வரும் வாய்ப்பு

சமூகத்தை பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் ஒரு தொடர்பாக யாழ். பல்கலைக்கழகம் புறநிலைக் கற்கை நெறியை வளர்த்து வருகின்றது.

யாழ். பல்கலைக்கழகதுணை வேந்தரும் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம் பிள்ளையின் முயற்சியினால் புறநெறிக் கற்கை அலகுகள் தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் சமூகத்தைத் தேடி வந்து உதவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஒரு குறித்த கற்கை நெறியில் பல விரிவுரையாளர்களைச் சந்திக்கவும் புதிய கருத்துக்களைப் பெற்றுப் கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி அடியெடுக்கும் ஒவ்வொரு பிரஜையும் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் கற்றோர் ஆக வேண்டும். வளர்ந்து வரும் அறிவியல் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கு இவ்வாறான கற்கை நெறிகள் உதவும் என்றார்.

பல்கலைக்கழகத்துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பேசுகையில் தெரிவித்ததாவது:

இலங்கையில் எந்தவொரு பல்கலைக்கழகமும் புறநிலைக் கற்கை நெறியை இதுவரை முன்னெடுக்கவில்லை. யாழ். பல்கலைக்கழகம் பல்கலைக் கழக வளாகத்துக்கும் தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளுக்கும் புறநெறிக் கற்கை நெறியை விஸ்தரித்துள்ளது.

இந்த கற்கை நெறியை விஸ்தரித்ததன் நோக்கம் சமூகத்திலுள்ள படித்த இளைஞர் யுவதிகள் அனைவரும் நன்மையடைய வேண்டும் என்பதே ஆகும்.

மாறி வரும் அறிவியல் யுகத்தில் மக்கள் வாழ கல்வி அறிவு தற்போது அதிகம் தேவைப் படுகின்றது. இன்று தகவல் நுட்பத்தின் மூலமும் விஞ்ஞான அறிவு மூலமும் அறிவு சார்ந்த தொழில்கள் அதிகமாகி உள்ளன. எனவே நிறைவான அறிவு தேவைப்படுகின்றது.

இதில் ஆழமான துறைகளை நாம் உடனடியாக உருவாக்க முடியாது விடினும் படிப்படியாக உருவாக்க வேண்டிய பாரிய பொறுப்பு யாழ். பல்கலைக்கழகத்துக்கு உண்டு.

''அபிவிருத்தி அடைந்த நாடுகளில்அறிவுசார்ஏற்றுமதிகளே அதிகம் யாழ்ப்பாணத்தில் அறிவுசார் விடயங்களை அதிகம் விரும்புகிறோம்.

''வடமராட்சியிலுள்ள சங்கங்களும் ஏனைய நிறுவனங்களும் இணைந்து இந்த புறநிலைக் கற்கைநெறி அலகுக்கு தனியான ஒரு கட்டடம் பெற்றுத்தர வேண்டும். அவ்வாறு அமையும் பட்சத்தில் இந்த அலகை அடிப்படையாகக் கொண்டு பின் வடமராட்சியின் ஏனைய பின் தங்கிய பிரதேசங்களுக்கும் புற நிலைக்கற்கை நெறியை விஸ்தரிக்க முடியும் என்றார். (இ-118)

# செய்திக் கொத்து

## செயலமர்வு

காரைநகர், மார்ச் 9

சத்திய சாயி மனிதமேம்பாட்டு கல்வி தொடர்பான செயலமர்வு நாளை தீவுப் பாடசாலை ஆசிரியர்களுக்காக நயினாதீவு மகா வித்தியாலயத்தில் எதிர் வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வை யாழ். மாவட்ட சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்விப் பிரிவினர் நடத்த உள்ளனர். பேராசிரியர் கி. சிவஞானசுந்தரம் (நந்தி) இந்தச் செயலமர்வை நெறிப்படுத்துவார். (இ-65)

## பாடசாலையை மீண்டும் இயக்க முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 9

கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக சேதமடைந்த வளலாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் மீளக்குடியேறி இரண்டு வருடங்களாகியும் இந்தப் பாடசாலை இன்னும் இயங்கவில்லை.

அப்பகுதி மக்கள் தற்போது அந்தவளவில் உள்ள பற்றைகள் செடிகளை வெட்டித் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (இ-15)

## சிவப்பு குத்தரிசி விநியோகம்

உரும்பிராய், மார்ச் 9

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் 'உ' பங்கீட்டு அட்டைக்கு 5 கிலோ சிவப்புக் குத்தரிசி வழங்கப்படுகிறது.

ஒரு கிலோவின் விலை 28 ரூபா 50 சதமாகும்.

வெளிச் சந்தையில் அரிசியின் விலை வெகுவாக உயர்ந்துள்ள நிலையில் பாவனையாளர்கள் இதனைக் கொள்வனவு செய்வதில் நாட்டம் கொண்டுள்ளனர். [ஐ-154)

## கட்டாக்காலி மாடு இடித்து ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

கட்டாக்காலி மாடொன்று இடித்துத்தாக்கியதில் ஒருவர் விலா எலும்புகள் உடைந்து காயமடைந்தார்.

வேலணையில் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் வேலணை வங்களாவடியைச் சேர்ந்த செல்லையா இராசலிங்கம் (வயது 57) என்பவரே காயமடைந்தவராவார்.

பனங்கிழங்குப் பாத்தியைக் கிளறிக்கொண்டிருந்த கட்டாக்காலி மாடொன்றைத் துரத்திய போதே அது எதிரே வந்த இவரை இடித்துத்தாக்கி விட்டுஓடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## சுழற்சி முறைக் கடன்

வலி. தென்மேற்கு, மார்ச் 9

மாதகல் பகுதியில் சுழற்சி முறைக் கடன் திட்டத்தின் கீழ் 41 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கடன்வழங்கப்பட்டுள்ளது.

ரூபா 10 ஆயிரம் அடிப்படையில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நுண் கருத்திட்டத்தின் கீழ் இந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளது. [இ-185]

## ஆலயத் திருநாள்

வடமராட்சி, மார்ச் 9

எட்டு வருட கால இடைவெளிக்குப் பின்னர் மயிலிட்டி காணிக்கைமாதா ஆலய திருநாள் அடக்கமாகக் கொண்டாடப்பட்டது.

கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற இந்த திருநாளில் மயிலிட்டி கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து குடா நாட்டின் ஏனைய பகுதிகளில் வசித்து வரும் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

மினிபஸ்களில் அங்கு சென்றவர்கள் தெல்லிப்பழை சோதனைச் சாவடியில் வைத்துப் படையினரின் பஸ்கள் மூலம் மயிலிட்டி சென்று திருநாளில் பங்கு பற்றி விட்டுத் திரும்பினர்.

இந்த தேவாலயத்தில் திருநாளைக் கொண்டாடவும், அங்கு சென்று வரவும் படையினர் அனுமதி வழங்கியிருந்தனர். (ஐ-173-135)

## படுக்கையில் பாம்பு கடித்தது

யாழ்ப்பாணம், மார்ச் 9

படுக்கையில் இருந்த ஒருவரைப் பாம்பு தீண்டியது.

காரைநகர் பொன்னம்பலம் வீதிப் பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் கதிரமலை மகாதேவன் (வயது 39) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார்.

பாம்பு தீண்டியதை அடுத்து ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். [இ-15]

## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 9

இணுவில் அன்னாசன சமூக நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அண்மையில் கேகாலையில் இடம் பெற்ற சென். ஜோன்ஸ் படை அணியின் தேசிய பாசறையில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டு, பல போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்ற யாழ். மாவட்ட அணியினர் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டனர்.

சென். ஜோன்ஸ் படை அணியின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் க. அருந்தவராஜா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (இ-7)

## 72ஏ,பி புள்ளிகளுக்கு நிவாரணம்

வலி. வடக்கு மார்ச் 9

யாழ். மாவட்டத்தில் 72 ஏ பி புள்ளிகளுக்கான நிவாரண உணவுப் பொருள் விநியோகம் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான உணவு முத்திரைகள் கடந்த ஆறு மாத காலமாக இங்கு எடுதது வரப்படவில்லை.

எனினும் கிராம அலுவலர்களினால் தயாரிக்கப் படும் பட்டியல்கள் மூலம் இம் முறையும் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (இ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

பகுதி - D

### கருத்தரங்குத் தொடர் - 07

(1998 — 1999)

இடம்: புவியியற்றுறை மண்டபம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

காலம்: 10 - 03 - 1999 (புதன்கிழமை) 3-00மணி

தலைவர்: பேராசிரியர் கா. குகபாலன்

பொருள்: 'சூழல் கல்வியும் எதிர்கால இளந் தலைமுறையினரும்'

வழங்குபவர்:
கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
(வருகை விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்.)

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பேராசிரியர் நா. ஞானகுமாரன்
செயலாளர் பகுதி - D

(63639)



## 31 ஆம் நாள் இதய நினைவுகளும் நன்றி நவிலலும்



வையகத்துள்
10—07—1919

தெய்வத்துள்
07—02—1999

### அமரர் கந்தர் கதிரவேற்பிள்ளை

07—02—1999 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்பு ஐயாவின் வீட்டுக் கிருத்திய நிகழ்வும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (09—03—1999) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

எமது அன்புத் தந்தையின் இறுதிக் கிரியைகளில் கலந்து ஆறுதலளித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(63703)



## மரித்து இன்னும் பேசுகிறார்



பூமியில்
15 – 08 – 1906
▼
நித்திய
இளைப் பாறுதலில்
09 – 03 1998

### P. J. ARULIAH

கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர்
அவர் எனக்கு இரட்சிப்புமானார்.
(சங். 117:14)

வாழ்க்கை என்ற நீண்ட பயணத்திலே பரலோகம் என்னும் நித்திய தேசத்தை நோக்கி விசுவாசக் சப்பலிலே ஜெபவீரர்கள் சென்று அடைந்த நம்பிக்கையிலே இன்றும் நாம் இளைப்பாறுகிறோம்.

அன்னாரின் சுகந்த வாசனை உள்ள முன் மாதிரியான ஜீவியத்துக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறோம்.

மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

Aruliah Sam Gunaratnam,
No 82A, Madumagawatte,
Nugegoda.

(C/6683)


# கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை; யாழ்ப்பாணத்தில் நடத்தக்கோரிக்கை

## அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், மார்ச் 9

கல்வி நிர்வாக சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்யுமாறு யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருந்து தோற்றவிருக்கும் 800 பட்டதாரிகள் கூட்டாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அவர்கள் யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது:

இந்த மாதத்தில் கொழும்பில் நடைபெறவிருக்கும் நிர்வாக சேவைக்கான பொதுப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 800 பட்டதாரிகள் தோற்றுகின்றனர்.

போக்குவரத்து வசதியின்மை, கொழும்பில் தங்கும் பாதுகாப்பு நிலைமை, வீணான செலவு ஆகிய காரணங்களால் இந்தப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நான்கு வருடங்களுக்கு ஒரு தடவையே இந்தப் பரீட்சை நடத்தப்படுவதாலும், பரீட்சைக்கு தோற்றுவதற்கு குறுகிய வயதெல்லை நிர்ணயிக்கப்பட்டிருப்பதாலும் ஒரு தடவை தோற்றாது விட்டால் பலர் தமது வாழ்நாளில் இந்தப் பரீட்சைக்கு தோற்றும் வாய்ப்பை இழப்பார்கள்.

பல வருடங்களாக யாழ். பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சையில தோற்றமுடியாத சூழ்நிலையே நிலவி வருகின்றது

இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதி ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

# தேர்தல் நடைமுறை பற்றி ஆராய்வதற்கு மாநாடு

கொழும்பு, மார்ச் 9

புதிய தேர்தல் நடைமுறைகளைத் தயாரிப்பது தொடர்பாக எதிர்க்கட்சி குழுப்பினர்களை மாநாடு ஒன்றுக்கு அழைப்பது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மல்பரிக் குழுவின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவினால் புதிய தேர்தல் நடைமுறைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

திட்ட அமுலாக்க அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளேயும் புதிய தேர்தல் நடைமுறை பற்றிய திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# இளம் விதவைகளுக்கு வேலைத் திட்டம்

வலிகாமம் தெற்கு, மார்ச்9

யாழ்ப்பாணத்தில் உள்ள இளம் விதவைப் பெண்களுக்கான பொருத்தமான வேலைத் திட்டங்களை இனங்காணும் நோக்குடன் நுண்கருத் திட்ட முயற்சிகளின் பயிற்சியாளர் திருமதி ஐராணி பெர்னான்டோ உட்பட்ட குழுவினர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல்12 மணிக்கு இக்குழுவினர் வலிகாமம்தெற்கு பிரதேச செயலகத்திற்கு விஜயம் செய்ய உள்ளனர்.

பிரதேச செயலர், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் மற்றும் செயலக அதிகாரிகள், கிராம சேவையாளர்களைச் சந்தித்து இப்பகுதி இளம் விதவைகளின் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாட உள்ளனர்.

கரவெட்டி, பருத்தித்துறை, கோப்பாய், தெல்லிப்பழை, சங்கானை, சண்லிப்பாய், சாவகச்சேரி பிரதேச செயலகங்களிலும் இவர்கள் சென்று கலந்துரையாட உள்ளனர்.

(ஐ - 152)

# ஒட்டுசுட்டான் மோதலில் இரு புலிகள் உயிரிழப்பு

வவுனியா, மார்ச் 9

ஒட்டுசுட்டான் பகுதியில் சனிக்கிழமை காலை 9 மணியளவில் தடைகளை அகற்ற முன்னேறி வந்த படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதலில் தமது தரப்பில் மேஜர் தர்மன் (கதிர்காமநாதன் குமாரதேவன் — யாழ்ப்பாணம்), கப்டன் அருள்வேந்தன் (விநாயகமூர்த்தி லோகேஸ்வரன் — கிளிநொச்சி) ஆகியோர் மரணமடைந்தனர் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(இ-3-164]

# கணனிப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

திவக கல்வி வலயத்தின் முறைசாராக்கல்விப் பிரிவின் கீழான கணனிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் இந்தப் பயிற்சி நெறி ஏப்ரல் முதலாம் திகதி முதல் நடைபெறவுள்ளது. (க-65

# விவரங்கள் சேகரிப்பு

திருநெல்வேலி, மார்ச் 9

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதாரதிணைக்கள நிறுவனங்கள் என்பவற்றுக்குத் தேவைப்படும் தளபாடங்கள், பொருள்கள் பற்றிய விபரங்கள் யாழ். சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளரினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

[இ-க-135]

# தூக்க நோய் கோழிகள் இறப்பு

தொல்புரம், மூளாய், சுழிபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள கோழிகள் தூக்க நோயினால் இறப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர், [க—30]

# வீதிகளை அகலமாக்கல்

சுழிபுரம், மார்ச் 9

சங்கானைப் பகுதியிலுள்ள வீதிகள் நன்கு அகலமாக்கப்பட்டு வருகின்றன.

சங்கானைச் சந்தையை அண்டிய பகுதி வீதிகளையும் மற்றும் பிரதான வீதிகளையும் பெருப்பிக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. [க-28]

## புலிகளின் சடலம் என

# துணைப்படை ஒப்படைத்தது தொழிலாளியின் சடலமே!

மட்டக்களப்பு, மார்ச் 9

மட்டக்களப்பு ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்ட சடலம் கொடுவாமடு வாசியான ராஜேந்திரம் முருகமூர்த்தி (27 வயது) என்ற கூலித் தொழிலாளியினுடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

வந்தாறுமூலையில் இடம்பெற்ற மோதலில் பலியான விடுதலைப் புலி உறுப்பினரின் சடலம் என தேசிய துணைப் படையினரால் இவரது சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

கூலித்தொழிலாளியான இவர் சம்பவதினம் மாலை வீட்டிலிருந்து மீன் வாங்கப் புறப்பட்டவர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மரண விசாரணை நேற்று முன்தினம் ஏறாவூர் வைத்தியசாலையில் நடைபெற்று சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ-21)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

எமது சங்கத்தின் பணியாளர்கள்
க. சின்னத்துரையின் அன்புத் தாயாரும்
க. தாமரைச்செல்வத்தின் அன்பு மாமியாருமாகிய

### திருமதி செல்லம்மா கணபதி

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பணியாளர்கள்,
ப. தெ. வ. அ. கூ. சங்கம்,
பளை.

(63673)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நோயாளர் நலன் புறக்கணிப்பு ஏன்?

யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் இவ்வாண்டு ஜனவரி மாதத்துக்கான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படவேண்டியவை.

யாழ்ப்பாணத்தில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆகையால் தெல்லிப்பழையில் முன்னர் இயங்கிய புற்றுநோய் ஆஸ்பத்திரியை மீள்வித்து இயங்கச் செய்ய வேண்டும். இது அறிக்கையில் சுட்டப்பட்டுள்ள ஓர் அம்சம்.

குடாநாட்டில் மனநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றோர் அம்சம்.

குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தை சீர்ப்படுத்தி, மக்களுக்கு மீண்டும் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் அக்கறையுடன் ஈடுபட்டுவருவதாக அரசு அடிக்கடி சொல்கிறது

ஆனால் மேற்கண்ட இரு தரப்பு நோயாளர்களினதும் நலன்களில் அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டியதாக இல்லை.

கொழும்புப்பயணம் குடாநாட்டு மக்களுக்கு இப்போது ''அரிதிலும் அரிது' என்ற செய்யுளுக்கு மிகப் பொருத்தமான ஒரு விடயமாகிவிட்டது. இத்தகைய நிலையில் நோயாளர்களும் அவர்களது உறவினர்களும் கொழும்பில் —மஹரகமவில்— உள்ள புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு சென்று சிகிச்சை பெறுவதென்பது புற்று நோயை விட உபாதை தருவதாகும்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு குடாநாட்டில் இருந்து நோயாளர்களைத் தனது கப்பலில் கொழும்புக்குக் கூட்டிச் செல்கிறது எனினும் சகல புற்றுநோயாளர்களையும் சிகிச்சைக்கு அழைத்துச் செல்வது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

ஆகையால் புற்றுநோயாளர்கள் குடாநாட்டிலேயே சிகிச்சை பெறுவதற்கான வசதிகளை அரசாங்கம் இங்கேயே செய்து கொடுக்க வேண்டும். புற்றுநோய் இக்கால ஆட்கொல்லிகளில் ஒன்றாகும். அதற்கு உரிய சிகிச்சை, உரிய வேளையில் வழங்கப்பட வேண்டும் என்பது எவருக்கும் தெரிந்த ஒன்று.

குடாநாட்டு மக்களின் நலனில் உண்மையாகவே அக்கறை இருந்தால் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியை மீள்வித்து புற்றுநோய்க்குரிய சகல மட்டச் சிகிச்சைகளையும் இங்கேயே வழங்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.

மனநோயாளரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு குடாநாட்டில் நிலவும் இயல்பற்ற வாழ்க்கையே காரணம் என்பது முற்றிலும் சரியானதே.

மானிப்பாயில் தற்போது தற்காலிகமாக இயங்கும் மனநோய் ஆஸ்பத்திரியை விஸ்தரித்தும் வேண்டிய வசதிகளை ஏற்படுத்தியும் மனநோயாளர்களின் நலன்கள் பேணப்பட வேண்டும்.

மேற்கூறிய இரண்டு ஆஸ்பத்திரிகளையும் சீர் செய்து நோயாளர் நலனைப் பேணுவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைளெடுக்கவேண்டும்.

# திருத்தப்பட்டும் திறக்கப்படாத கைதடி - கோப்பாய்ப் பாலம்

## பொதுமக்களுக்கு விடிவுகாலம் எப்போது?

தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி பகுதிகளை இணைக்கும் வீதியான கோப்பாய் — கைதடி வீதி பொதுமக்களின் பாவனைக்கு முழுமையாகத் திறந்து விடப்படாமையினால் மக்கள் பல்வேற சிரமங்களையும் எதிர்நோக்கி வருகிறார்கள்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன் இராணுவத்தினர் வலிகாமம் பகுதியில் நிலை கொண்டதையடுத்து இந்த வீதி பொது மக்களின் போக்குவரத்துக்கு முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தது. பின்பு பலரின் வறுபுறுத்தல்கள், வேண்டுகல்களையடுத்து 1997 பிற்பகுதியில் அரச ஊழியர்கள், மாணவர்கள் இந்த வீதியில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். அனுமதி பெற்ற சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் தவிர்ந்த வேறெந்த வாகனமும் இந்த வீதியில் செல்வதற்கு அனுமதி

### செய்தி மடல்

மறுக்கப்பட்டிருந்தது

#### வீதி திருத்தப்பட்டு நல்ல நிலையில்

இந்த வீதியிலுள்ள பாலங்கள் உடைந்தும் வீதி எங்கும் குண்டும் குழியுமாக இருந்ததால் வாகனங்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதெனஅப்போது கருதப்பட்டது.

கடந்த ஆண்டில் இந்த வீதி கைதடிச்சந்தியிலிருந்து கோப்பாய்ச்சந்தி வரையும் பாலங்கள் உட்பட அனைத்தும் முழுமையாகத் திருத்தப்பட்டு திருப்தியான போக்குவரத்து மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் செப்பனிடப்பட்டுள்ளது.

ஆனால் இதில் பயணம் செய்பவர்கள் கைதடிப்பகுதியிலும் — கோப்பாய்ச் சந்தியிலும் பாதுகாப்பு அரண்களில் நிற்கும் படையினரின் விருப்பத்தைப் பொறுத்தே பயணத்துக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த வீதியில் பயணம் செய்வதற்கு 'பாஸ்' வேண்டுமென படையினர் கேட்பதால் மக்கள் திருப்திபாகத் தமது பயணத்தைத் தொடர முடியாத நிலையிலுள்ளனர்.

வடமராட்சியிலிருந்தும் வலிகாமத்திலிருந்தும் தென்மராட்சி நோக்கிச் செல்வதற்கு இந்த வீதிக்கு வருபவர்கள் கோப்பாய்ச்சந்திக்கு அப்பால் செல்வதற்கு அனுமதிக்கப்படாமையினால் அங்கிருந்து யாழ்ப்பாணம் சென்றுதான் தென்மராட்சிக்குச் செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர்.

இதேபோன்று தென்மராட்சியிலிருந்து கோப்பாய் மற்றும் உரும்பிராய், மருதனார் மடம், சுன்னாகம், திருநெல்வேலி போன்ற இடங்களுக்கு சந்தை மற்றும் பல்வேறு தேவைகளின் பொருட்டுகைதடிக்கு ஊடாக வருபவர்களை இந்த வீதியால் செல்ல விடாது படையினர் திருப்பியனுப்பி விடுகின்றனர்.

இதனால் சந்தைகள் உட்பட மற்றும் தமது சொந்தத் தேவைகளின் பொருட்டு பொதுமக்கள் இந்த வீதியைப் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளனர் என்பது சுட்டிக் காட்டத்தக்கது.

### மாணவர் அரச ஊழியர் பெரும் பாதிப்பு

படையினரின் கட்டுப்பாடு வருவதற்கு முன்னர் இந்த வீதியில் மினிபஸ் மற்றும் வ. பி போ. வ. பஸ்கள் சேவையிலீடுபட்டு வந்தன. தற்பொழுது இந்தச் சேவைகள் நடைபெறாமையினால் கோப்பாய், உரும்பிராய், சுன்னாகம் போன்ற பகுதிகளி

கேசரி

லுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களும் இவகுள்ள பாடசாலைகளில் கற்கின்ற அப்பகுதி மாணவர்களும் யாழ்ப்பாணத்துக்கு பஸ்ஸில் சென்று அங்கிருந்து மேலும் ஒரு பஸ் பிடித்து தமது போக்குவரத்துக்காகச் சிரமப்படுகின்றனர்.

இதே போன்றுதான் மேற்குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து தென்மராட்கிக்குச் செல்பவர்களும் தமது போக்குவரத்துக்காக நீண்ட நேரத்தைச் செலவு செய்வதுடன் தமது பணத்தையும் விரயமாக்க வேண்டியுள்ளனர்.

கைதடியிலிருந்து கூப்பிடு தூரம் வரையான கோப்பாய்க்கு செல்வதற்த இந்த வீதியில் பயணம் செய்ய முடியாமல் சிரமப்படும் மக்களின் நிலை தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நலன் விரும்பிகள் மற்றும் பொது நிறுவனங்களினாலும் எடுத்துரைக்கப்பட்ட போதிலும் இதுவரையும் இதுபற்றி அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.

இந்த வீதியில் போக்குவரத்து பஸ் சேவையைத் தொடர்வதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் பலாலியிலுள்ள படைத் தலைமையகத்திற்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெவிக்கப்படுகின்ற போதிலும் இந்த வீதியில் பஸ் சேவையை நடத்துவதற்கான அறிகுறிகளே தென்படவில்லை.

யாழ். மாவட்டத்தின் சகல வீதிகளும் மக்களின் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டிருப்பது போன்று இந்த வீதியும் போக்குவரத்துக்காக முழுமையாகத் திறக்கப்படுவதுடன் இந்த வீதியில் பஸ் சேவையைத் தொடர்வதற்கும் அனுமதிக்கப்பட வேண்டும்.

கைதடிக்கும். கோப்பாய்க்கும் இடையில் இரண்டரை கிலோ மீற்றர் தூரம் வரையான இந்த வீதியில் மக்கள் சுதந்திரமாகத் தமது பயணத்தை மேற்கொள்ள அனுமதிப்பதன் மூலம் தென்மராட்சி மண்ணில் உற்பத்தியாகும் விவசாய விளைபொருள்களை வலிகாமம், வடமராட்சி போன்ற பகுதிகளுக்கும், வலிகாமத்தில் உற்பத்தியாகும் விவசாய பொருள்களை தென்மராட்சிப் பகுதிக்கும் எடுத்துச் சென்று தமது உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தை வாய்ப்பினையும் ஏற்படுத்த முடியும் என்பதனைக்கவனத்தில்கொள்ளவேண்டும். ★

### யாழ். மாவட்டத்தில் காணாமற்போனோரில்

# 144 முறைப்பாடுகள் தொடர்பாகவே ஆணைக்குழு விசாரணை நடத்தும்

கொழும்பு. மார்ச் 9

யாழ் மாவட்டத்தில் காணாமற் போனோர் தொடர்பாகக் கிடைத்த 380 முறைப்பாடுகளில் 144 முறைப்பாடுகள் தொடர்பாகவே ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளும்.

காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் யாழ். செயலகத்தில் விசாரணைகளை மேற்கொள்ள இருக்கும் இந்த ஆணைக்குழு அது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காணாமற் போனோர் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக அங்கேயே விசாரணை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இருந்து கிடைக்கப்பட்ட முறைப்பாடுகளில் முன்னைய விசாரணைக் குழுக்களால் விகாரிக்கப்பட்டு எஞ்சியுள்ள 380 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை ஆணைக்குழு விசாரிக்க முடிவு செய்தது

இந்த முறைப்பாடுகளில் 144 முறைப்பாட்டுக்காரர்களின் தற்போதைய முகவரி உறுதிப்படுத்தப்பட்டு உள்ளமையால் அவர்கள் மாத்திரமே விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்களில் 38 முறைப்பாட்டுக்காரர்கள் இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. அவர்களது முறைப்பாடுகள் காலக் கிரமத்தில் அந்த அந்த மாவட்டங்களில் விசாரிக்கப்படும்.

எஞ்சிய 198 முறைப்பாட்டுக் காரர்கள் தற்போது எங்கு இருக்கிறார்கள் என்று ஆணைக்குழுவால் உறுதிப் படுத்தப்பட முடியாதுள்ளது.

குறிப்பிட்ட 144 முறைப்பாடுகளில் 99 யாழ். அரச அதிபர் பணிமனையிலும் 30 பருத்தித்துறை பிரதே சபை அலுவலகத்திலும் 15 ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்திலும் விசாரிக்கப்படும். இத்தருணத்தில் குறித்த காலத்தின் நிகழ்வுகள் பற்றி விடயம் அறிந்த பல பிரமுகர்களும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளும் காணாமற் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்க பிரதிநிதிகளும் இந்த ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்க உள்ளனர்.

இந்த முறைப்பாடுகளுள் கிளாலிக் கடலில் காணாமற் போன 14 பேர் பற்றியும் அல்லைப்பிட்டிபிலிப்நேரியார் தேவாலயத்தில் இருந்து காணாமற்போன 99 பேர் பற்றியும் இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது காணாமற் போன 7 பேர் பற்றியும் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்ற போது காணாமற்போன 41 பேர் பற்றியும் என்ன நடந்தது என்று தெரியாத 34 பேர் பற்றியும் இனம் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமற் போயுள்ளதாகக் கூறப்படும் எஞ்சியோர் பற்றியும் விசாரணைகள் நடைபெறவுள்ளன.

இந்த ஆணைக்குழுவின் அதிகாரப்பத்திரத்துக்கமைய குறித்த நபர்கள் உண்மையில் காணாமற் போய் உள்ளனரா வென்பதும் அவ்வாறானால் அதற்குப் பொறுப்பானவர்கள் யாவரெனவும் அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கை யாதெனவும் இவ்வகையான நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறுவதைத் தவிர்க்க சட்டதிட்டங்களில் ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்கள் எவையெனவும் பாதிப்புற்றோருக்கு எந்த வகையான நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

விசாரணைகளின் முடிவுகள் முறைப்பாட்டுக் காரர்களுக்கு தனித்தனியே அறிவிக்கப்படுவதில்லை. முடிவுகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும்.

இவ்வகையான ஆணைக்குழுக்களின் அறிக்கையின் அடிப்படையிலே ஏற்கனவே 190–க்கு மேற்பட்ட இராணுவ பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகவழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-க-3)

### நாளை

மாசி 26

புதன்கிழமை

**திதி:** அட்டமி பின்னிரவு 1. 25 வரை.
**நட்சத்திரம்:** கேட்டை முன்இரவு 9.28 வரை.
**சுபநேரம்:** 4.54- 6.24
**ராகுகாலம்:** 12.24-1.54
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

எப்படி வேண்டுமானாலும் சமையுங்கள் ஆனால் அன்போடு பரிமாறுங்கள்.

-இங்கிலாந்து பழமொழி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சிக்கான பல்கலை அனுமதி 'கோட்டா' அதிகரிக்கப்பட வேண்டும்

## மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 9

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ள சனத்தொகைக்கு ஏற்ப பல்கலைக்கழக அனுமதிக்கான கோட்டா அதிகரிக்கப்பட வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

பல்கலைக்கழக அனுமதியில் கிளிநொச்சி மாணவர்கள் எதிர்நோக்கும் பாதிப்புக்கள் குறித்து அந்த ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தின் சனத்தொகை 1981 ஆம் ஆண்டு 91 ஆயிரமாக இருந்தது. தற்சமயம் அந்த மாவட்ட சனத்தொகை ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 274 ஆக உயர்ந்துள்ளது.

சனத்தொகைஅதிகரிப்புக்கு காரணம் சாதாரண குடிசன அதிகரிப்பு மட்டுமல்லாது இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ள மக்களும் ஆகும்.

இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ள மக்களின் எண்ணிக்கை பல்கலைக்கழக அனுமதியின் போது கவனத்தில் எடுக்கப்படவில்லை. இந்த நிலைமை மாறவேண்டும்.

இடம்பெயர்ந்து வரும் மக்கள் ஓர் இடத்தில் ஐந்து வருடம் தங்கினால் அவர்கள் அந்த மாவட்ட மக்களாகத் தற்சமயம் அரசாங்கத்தால் ஏற்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் கிளிநொச்சியில் நிரந்தரமாக இருக்கும் மக்களுடன் இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களின் எண்ணிக்கையையும் சேர்த்து பல்கலைக்கழக அனுமதிக்கான கோட்டா வழங்கப்பட வேண்டும்.

இருக்க இடமின்றி கல்வி பயில வசதியின்றிப் பெரும் கஷ்ட நிலையில் தமது கல்வியை மேற்கொள்ளும் இந்த மாணவர்களுக்கு வசதி அளிக்கப்படவேண்டியது அவசியமாகும்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[இ-3]

## நுண்கருத் திட்டங்கள்; ஆலோசனை பெறப்படும்

யாழ் மாவட்டத்தில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இந்த ஆண்டு மேற்கொள்ளவுள்ள நுண்கருத்திட்டங்களுக்கான ஆலோசனைகள் பொது அமைப்புக்களிடம் கோரப்பட்டுள்ளன.

கிராம மட்டத்தில் ஏற்படும் தேவைகளின் அடிப்படையில் நுண்கருத்திட்டங்களை வகுத்து பிரதேச செயலர் மட்டத்தில் உள்ள குழுக்களுக்கு சமர்பிக்குமாறு பொது அமைப்புக்கள் கேட்கப்பட்டுள்ளன.

மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு பயன் அளிக்கக் கூடிய வகையில் குடிதண்ணீர், கல்வி வசதி போன்ற திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

கிராம மட்டத்தில் நுண்கருத்திட்டங்களை இனங்கண்டு அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் திட்டங்களின் பயனை மக்கள் முழுமையாகப் பெறக்கூடியதாக இருக்கும் என்று செயலகத் திட்டமிடல் பகுதி அதிகாரி தெரிவித்தார்.

(இ-3)

## தவக்காலச் சிந்தனை-21

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு? இன்று பலரும் பலதை இழந்தவராய் வாழும் போதுதான் முன்னைய காலத்தில் தாம் இருந்த சிறப்பை, பெருமையைச் சொல்லிக் கொள்வதில் தம்மைத் தர்மவான்களாக ஆக்கிக் கொள்வார்கள். இவை இன்றும் யாருக்கும், எதிலும் உதவாது. செய்ய வேண்டியதை இன்றே நன்றே செய்ய. சீராக் ஆகமத்தில் ஒரு செய்தி.

''எல்லா ஏழைகள் மீதும் அன்பாய் நடந்துகொள் முதியோருக்கு உன் மனதைத் தாழ்த்தி பெரியோருக்கு தலைவணங்கு. மகிழ்ச்சியோடு எளியவரின் மன்றாட்டுக்கு செவிகொடு நீ கொடுக்க வேண்டியதை அவனுக்குக் கொடு சாந்த குணத்தோடு அவனுக்கு சமாதான வார்த்தைகளைச் சொல்! இன்று என்ன செய்கிறாய் என்றால் சென்ற காலத்தைச் சொல்லி இத் தவக்காலத்தை வீணாக்கி விடாது பயனுள்ளதாக்குவீரே.

— ஞ. மரியநாயகம்

## புடைவைக் கைத்தொழில் பயிற்சி பாடசாலைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 9

புடைவைக் கைத்தொழில் திணைக்களம், நல்லூரில் உள்ள புடைவைக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலையில் 1999 / 2000 கல்வி ஆண்டுக்கு புதிய மாணவர்களைச் சேர்ப்பது தொடர்பான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரர்கள் ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத முறையில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்றும் —

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியன்று 18 வயதுக்கும் — 28½ வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும் என்றும் — கோரப்பட்டுள்ளது?

இரு வருடகாலம் இடம்பெறும் மேற்படி பயிற்சி நெறியில் பங்கு கொள்ளும் மாணவர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா ஐம்பது கொடுப்பனவு வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 'பணிப்பாளர்' புடைவைக் கைத்தொழில் திணைக்களம் இல. 34, மலே வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு அடுத்த மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மாதிரி விண்ணப்பப்படிவத்தையும் மேலதிக விவரங்களையும் உதயன் அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

(இ-7)

# இடம்பெயர்ந்த கஷ்ட நிலையிலும் தற்துணிவு பேணும் பாடசாலைகள்

## அதிபர், ஆசிரியர் ஊக்கத்துக்குப் பாராட்டு

உரும்பிராய், மார்ச் 9

''எத்தனையோ இடர்கள் துன்பங்களுக்கு மத்தியில் இடம்பெயர்ந்த நிலையில் இயங்கும் இது போன்ற பாடசாலைகள் தற்துணிவுடன் சிறப்பாகசெயற்பட்டுஇயங்குகின்றன இவற்றின் அதிபர்கள், ஆசிரியர்களின் ஊக்கமே இதற்குக் காரணம் இவர்கள் பெருமைக்குரியவர்கள்.''

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் வலிகாமம் வயலக் கல்விப் பணிப்பாளர் வை. இராசையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் ஆ.சி. நடராசா தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது:

''எமது பிரதேசத்தில் 5-கல்வி வலயங்கள் உள்ளன. இவற்றில் வலிகாமம் பெரியது. தெல்லிப்பழைப் பிரதேசத்தைச் சேர்ந்த 16 பாடசாலைகள் வேறு இடங்களில் இயங்குகின்றன. கல்லூரி என்றதும் பெரிய கட்டடங்களே எமது மனக்கண்ணில் தோன்றும். ஆனால் இக்கல்லூரிகள் கொட்டில்களிலேயே இயங்குகின்றன.

இவ்வாறு தற்காலிகக் கொட்டில்களில் இயங்கும் நிலையிலும் இப் பாடசாலைகள் விளையாட்டிலும், கல்வியிலும் மட்டுமல்லாது, வேறு போட்டிகளிலும் முன்னணியில் உள்ளன. மாவட்ட ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் இந்தக் கல்லூரிகள் கலந்துகொண்டு கணிசமான அளவு பரிசுகளைப் பெற்றுள்ளன. இவர்கள் திறமையாகச் செயற்பட பழைய மாணவர்கள், பெற்றோர்கள் முதலான பல்வேறு சக்திகள் துணை புரிகின்றன.

கல்வி என்பது ஒரு நல்ல பிரசையை உருவாக்குவதாகும். கல்விச் சான்று அதில் ஒரு கூறுமட்டுமே. விளையாட்டுப் போட்டி போன்ற இந்த நிகழ்வுகள் நல்ல பிரசைகள் உருவாகவும் இயற்கையான ஆற்றல்களை வெளிப்படுத்திக் கொண்டு வரவும் உதவுகின்றன. அதனைத் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ. கமலநாதன், வலி வடக்குத் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் வ. சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதம விருந்தினர்களால் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகள் வழங்கப்பட்டன.

(இ-154)

# புலிகளைச் சந்தித்ததாக ஜெயலத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 9

விடுதலைப் புலிகளைத் தாம் சந்தித்ததாகவும் ஆயினும் அவர்களுடன் அரசியல் விடயம் தொடர்பாக எதுவும் பேசவில்லை என்றும் வன்னிப் பகுதிக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு கொழும்பு திரும்பிய ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே புலிகளைச் சந்தித்ததாகக் அவர் கூறினார்.

வன்னிப் பகுதியில் விடுதலைப் புலிகள் தமக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்றும் ஜெயலத் தெரிவித்தார்.

கடந்த வருடம் இவர் வன்னிக்குச் சென்று திரும்பிய போது பொலீஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டது தெரிந்ததே. (இ-5)

## வாசகர் திருமுகம்

### நிராகரிக்கப்படுவது நியாயமா?

16–03–98 ஆம் திகதிக்கு முன்னர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் அனைவரையும் பயிற்றுவிக்கும் நோக்குடன் ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. ஆசிரியர்கள் ஆசிரிய கலாசாலை அனுமதியை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். பாடசாலைகளில் கூட அவர்களுக்கு நேர அட்டவணை கொடுக்கப்படவில்லை.

இந்நிலையில் பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் இடவசதி இல்லை என்பதை முக்கிய காரணமாகக் காட்டி 28-02-98-ற்கு முன்னர் நியமனம் கிடைத்தவர்களுக்கே அனுமதி என அறிக்கை விட்டிருந்தார்.

ஆனால் குளறுபடி நடந்ததாகவே கருத வேண்டி உள்ளது. 28-2-98-க்கு முன்னர் நியமனம் கிடைத்த பலருக்கு இன்று ஆசிரிய கலாசாலை அனுமதி இல்லை. அதேவேளை 28-2-98 – க்குப் பின்னர்—16-3-98 – க்கு முன்னர்— நியமனம்—கிடைத்த சிலருக்கு கலாசாலை அனுமதி கிடைத்துள்ளது. இது எந்த வகையில் நியாயம் என்பதுதான் புரியவில்லை.

விசாரித்த போது பாடங்களைப் பொறுத்துத் தெரிவு செய்ததாகக் கூறினார்கள். பாடங்களைப் பொறுத்துத் தாம் தெரிவு செய்ததாக அதிபர் அறிக்கையில் தெரிவிக்கவில்லையே. ஒன்றாக ஆசிரிய நியமனம் பெற்றவர்களில் ஒரு பகுதியினர் கலாசாலைக்கு அனுமதிக்கப்பட இன்னொரு பகுதியினர் நிராகரிக்கப்படுவது எந்த வகையிலும் நியாயம் இல்லை.

இன்று இவர்கள் கலாசாலை அனுமதியில் மட்டும் தான் நிராகரிக்கப்பட்டார்கள். ஆனால் தொடரும் இவர்களின் சேவைக்காலத்தில் இந்நிராகரிப்பு எவ்வளவோ இழப்பையும் பின்தங்கலையும் தரும் என்பது நிர்வாகத்தினருக்குப் புரியவில்லையா? ஒன்றாக நியமனம் பெற்றவர்களில் இப் பாகுபாடு நிகழக்கூடாது. இவ் விடயத்தில் நிர்வாகத்தினர் உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் வேண்டுகிறேன்

திருமதி. அ. சிவகுமரன்

கரவெட்டி.

### இவ்வருடமே அனுமதிக்குக!

ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் காலடி எடுத்து வைப்போம் என எதிர்பார்த்த பல ஆசிரியர்களுக்கு 22-02-1999 இல் உதயனில் வெளியான பலாலி ஆசிரியர் கலாசாலையின் அதிபரின் அறிக்கை மிகுந்த கவலையைத்தருகின்றது.

பலாலி, கோப்பாய் ஆகிய இரு ஆசிரிய கலாசாலைகளுக்கும் வெட்டுத் திகதியாக 28-2-98 ஆம் திகதியை தீர்மானித்ததால் 16-3-98 இல் நியமனம்பெற்றவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

விரிவுரையாளர் பற்றாக்குறையாக இருப்பதாக பயிற்சிக்கலாசாலை அதிபரின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டது. இதன் பொருட்டு ஆசிரியர் கலாசாலைக்கு புதியவிரிவுரையாளர்களை உள்வாங்கலாம். எம் மத்தியில் அதி உயர்மட்டம் பெற்றவர் இருக்கின்றனர். அவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கியதாக இருக்கும்.

மேலும் கலாசாலைக்கு அதிக ஆசிரியர்களை உள்வாங்கினால் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படும். அதனால் அனைவரையும் உள்வாங்க முடியாது எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இப்பொழுது பல பட்டதாரிகளும் கல்விக் கல்லூரியில் படித்தவர்களும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் புதிதாக நியமனம் பெற்றவண்ணமே உள்ளனர். பற்றாக்குறை ஏற்படும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல.

தகுதிகாண் ஆசிரியர்களான எமக்கு 2,500 ரூபா கொடுப்பனவே வழங்கப்படுகின்றது. 'இது தற்போதைய வாழ்க்கைக்கு வேண்டியதும் போதியதுமானதல்ல. நாம் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்தாலே—

(அ) நிரந்தர நியமனம் பெறுவோம்.

(ஆ) ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படுவோம்.

(இ) சம்பளம்அதிகரிக்கப்படும். (5,000ரூபாவாக)

எனவே தேவையான விரிவுரையாளர்களைச் சேர்த்து எம் போன்ற ஆசிரியர்களையும், ஆசிரியர் கலாசாலையில் இவ்வருடமே அனுமதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மனம் உண்டானால் இடம் உண்டு.

நன்றே செய்க இன்றே செய்க.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் 1000 வீடுகளைப் புனரமைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 9
யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினால் இந்த ஆண்டு ஆயிரம் வீடுகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இத் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக சண்டிலிப்பாய், நல்லூர், ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 300 வீடுகளைப் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் மட்டும் இந்த வீட்டுத் திட்டத்தில் இணைக்கப்பட்டு வீடமைப்புக்குத் தேவையான சகல பொருள்களும் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தால் வழங்கப்படுவதுடன் வீடு கட்டும் தொழிலாளர்களுக்கான கூலிவடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால்வழங்கப்படவுள்ளது.

நெடுந்தீவு, சாவகச்சேரி, கரவெட்டிப்பிரதேச செயலர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (ஐ-5)

# சர்வதேச பெண்கள் தினம் தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைக்கு கண்டனம்

ஒட்டாவா, மார்ச் 9
இலங்கையில் தமிழ்ப் பெண்களுக்கு எதிராக படையினரால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்செயல்களுக்கு எதிராக கனடாவில் நடைபெற்ற அனைத்துப் பெண்கள் தின வைபவத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கனடிய நகரான ஒட்டாவாவில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அதிக எண்ணிக்கையில் தமிழ்ப் பெண்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்ப் பெண்களுக்கு எதிரான போர் ஆயுதமாக பாலியல் வன்முறையை கட்டவிழ்த்துவிடும் இராணுவத்தினரின் கொடிய செயல்கள் நிறுத்தப்படவேண்டும் என்றும் அந்த வைபவத்தில் வலியுறுத்தப்பட்டது.

# யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் சடலங்களை எலிகள் கடிக்கின்றன!

யாழ்ப்பாணம், மார்ச் 9
யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள பிரேத அறைக்கு போதிய வசதிகள் இல்லை. அங்கு வைக்கப்படும் சடலங்களை எலிகள் கடிக்கின்றன.

யாழ்ப்பாணம் வந்திருந்த வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என். கே. ஒபடகேயிடம் இது தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்ற நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் இது தொடர்பான மகஜர் ஒன்றை அவருக்கு அனுப்பி உள்ளார்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

★ யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள பிரேத அறைக்கு குளிர்சாதன வசதி உட்பட ஏனைய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை இதனால் வைத்திய அதிகாரிகள், நீதிச்சேவை அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் சுகாதாரச் சீர்கேட்டைச் சந்திக்கின்றனர். யாழ். ஆஸ்பத்திரிக்குச்சென்ற சமயம் இந்த நிலை குறித்துக் கூறப்பட்டது. அங்குள்ள சடலங்களில் எலிகள் கடித்திருந்ததையும் கண்டேன்.

★ யாழ். நீதிமன்றத்துக்கு போதிய சுட்டட வசதிகள் இல்லை. ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கும் கட்டட வசதியில்லை. தற்சமயம் நீதிமன்றம் இயங்கும் கட்டடத்தில் மலசல கூட வசதி கூட இல்லை.

★ போதிய தளபாட வசதிகள் நீதிமன்றங்களில் இல்லை.

— இப்படித் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# முறைசாராக்கல்வி இறுதிப் பரீட்சை

குருநகர், மார்ச் 9
யாழ். வலயக் கல்வித் திணைக்கள முறைசாராப் பிரிவினால் 1998 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முறைசாராக் கல்விப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்ற உள்ளவர்கள் தமது அனுமதி அட்டைகளை நாளை மறுதினம் வியாழக்கிழமை பாடசாலை அதிபர்களிடம் பெற்றுக் கொள்ளுமாறு யாழ் வலயக் கல்வித் திணைக்கள முறைசாராப் பிரிவுக்கிளை அறிவித்துள்ளது. (ஐ-51)

# உசனில் குடும்பஸ்தர் கைது

மிருசுவில் உசன் சந்தியில் வைத்துக் கடந்த 6 ஆம் திகதி குடும்பஸ்தர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி கிருஷ்ணகுமார் (வயது 30) என்பவரே படையினரால் கைது செய்யப்பட்டவராவார். இவர் கைது செய்யப்பட்டதற்கான ரிசிற் எதுவும் படையினரால் வழங்கப்படவில்லை. இது குறித்து யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை—
கடந்த 5 ஆம் திகதி கைது செய்யப்பட்ட குருநகரைச் சேர்ந்த ஜேசுதாசன் கில்பர் நிக்சன் என்ற இளைஞர் நேற்று முன்தினம் படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# ஐரோப்பிய ஒன்றிய அதிகாரி வருகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 9
ஐரோப்பிய சமூக ஒன்றியத்தின் தூதுவர் உசிற்றாலோ இல்க்கா இம்மாதம் 16 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் (ஜீ. ரி. சற்) மேற்கொள்ளும் திட்டங்களைப் பார்வையிடும் இவர் இம்மாதம் 17 ஆம் திகதி நெடுந்தீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறைப் பகுதிகளிலும் 19 ஆம் திகதி வாதரவத்தைப்பகுதியிலும் குடிநீர் விநியோகத் திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளார் (ஐ-5)

# மட்டு. மாநகரசபை பதவிக்காலத்தை நீடிக்க வேண்டாம் எனக் கோரிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 9
மட்டக்களப்பு மாநகரசபையின் பதவிக் காலம் நீடிக்கப்படக்கூடாது என்ற கோரிக்கை வரியிறுப்பாளர்களால் விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபையின் பதவிக்காலம் எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி முடிவடைகின்றது.

இது தொடர்பாக உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானாவிற்கு மகஜர் ஒன்றை அனுப்புவதற்காக வரியிறுப்பாளர்களிடமிருந்து கையொப்பங்கள் திரட்டப்பட்டுவருகின்றன.

★ தற்போதைய மாநகர சபை நிர்வாகம் எமக்குத் தேவையில்லை.

★ மாநகரசபை உறுப்பினர்கள் 19 பேரின் கரங்கள் கறைபடிந்தவை.

★ மாநகரசபை கலைபட்டு விசேட ஆணையாளரிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

★ காலம் வரும்போது தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

★ மாநகரசபை விசேட ஆணையாளர் நியமனத்தின் போது அரசியல் செல்வாக்குக்கு இடமளிக்கக் கூடாது,

போன்ற கோரிக்கைகள் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஐ-21)

# மன்னார் ஆயர் ரணிலுக்குக் கடிதம்

கொழும்பு, மார்ச் 9
மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் கண் பரிசோதனை முகாம்களை நடத்திய டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனாவை அனுமதித்தமைக்காக ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மன்னார் ஆயர் அதிவண. ராயப்பு யோசப் நன்றி தெரிவித்தார்.

இது தொடர்பாக ஆயர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த கால நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 102 பேருக்கு 'கற்றறாக்' சத்திர சிகிச்சையும் ஆயிரத்து 200 பேருக்குக் கண்ணாடியும் வழங்க இந்தக் கண் சிகிச்சை முகாம் உதவியது.

இந்த முகாமை நடத்தியதில் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனாவின் பங்கு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. இதுபோன்று தொடர்ந்தும் கண் சிகிச்சை முகாம் நடத்த அவருக்கு அனுமதி வழங்க வேண்டும்—என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதை தவிர்ப்புப் பற்றி மாணவருக்குப் போட்டி

கல்வி, உயர்கல்வி அமைச்சின் வழிகாட்டல் ஆலோசனை மற்றும் பாட இணைப்புக் கல்விப் பிரிவினால் போதைப்பொருள் தவிர்ப்புப் பற்றி பாடசாலை மாணவர்களை அறிவுறுத்தும் நோக்கில் நாடளாவிய போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

ஆறாம் தரத்துக்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்கள் பங்குபற்றக்கூடியதாக சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் போட்டிகள் இடம் பெறும்.

சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவுகளைகொண்டதாக போட்டிகள் அமையும்.

சுவரொட்டிப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, சிறுகதைப்போட்டி, நாடகப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு சான்றிதழ்களும் பணப்பரிசுகளும் வழங்கப்பட உள்ளன.

தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கும் ஆறுதல் பரிசுகள் பெற்றுக்கொள்பவர்களுக்கும் ரொக்கப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும் ரொக்கப் பரிசுடன் மதிப்பீட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

# தென்னையால் வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 9
கள்சீவுவதற்காக தென்னை மரத்தில் ஏறியவர் தவறிக் கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

சரசாலையில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் கணபதி புஸ்பராசா (வயது 42) என்பவரே காயமடைந்தவராவார். காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

# கிராம அலுவலர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 9
யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10-00 மணிக்கு யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவுக்குள் கடமையாற்றும் சகல கிராமசேவையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# ஆங்கில ஆசிரியருக்கு கருத்தரங்கு

குருநகர், மார்ச் 9
யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் கீழ்இயங்கி வரும் பாடசாலைகளில் ஆங்கில பாடம் கற்பிக்க அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் சனி, ஞாயிறு இரு தினங்களும் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் இவ்விரு தினங்களிலும் காலை 8.30மணிக்கு சமூகம் கொடுக்குமாறு யாழ். வலயக் கல்வித்திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கில) டி. ஆர். அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

# தென்னங் கன்று விநியோகம்

உரும்பிராய், மார்ச் 9
உரும்பிராய் கமநலகேந்திர நிலையத்தில் தென்னம் நாற்றுகள் விநியோகிக்கப்படுகின்றன. ஒன்றின் விலை 25 ரூபா ஆகும்.

போதியளவு நாற்றுகள் கையிருப்பில் இருப்பதனால் அவற்றைப் பெற்றுப் பயனடையுமாறும் பொதுமக்கள் கோரப்பட்டுள்ளனர். (ஐ-154)

# கருத்தரங்கு

சுன்னாகம், மார்ச், 9
தேசிய கலை இலக்கிய பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட திறனாய்வியல் கருத்தரங்குத் தொடரின் இரண்டாவது அமர்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில்மேலைத்தேய இலக்கியக் கொள்கைகள் என்ற தலைப்பில் பேராசிரியர் ... கருத்துரை வழங்குவார். (ஐ-27)

# இப்படியும் நடக்கிறது

மட்டக்களப்பு, மார்ச் 9
மட்டக்களப்பு மாவட்டம் பனிச்சங்கேணி என்னும் இடத்தில் கடற்கரையில் போதையில் காணப்பட்ட 15 தமிழ் மீனவர்கள் படையினரின் புதுவிதமான தண்டனைக்குள்ளாயினர்.

கடந்த புதன்கிழமை இரவு தொழிலை முடித்துக் கொண்டு சாராயம் அருந்திப் பொழுதைக் கடற்கரையில் உல்லாசமாகக் கழித்துக் கொண்டிருந்த மீனவர்களுக்கு இக்கதி ஏற்பட்டது.

கடற்கரையில் விடுதலைப் புலிகள் வந்து இறங்கி தாக்குதல் நடத்த ஆயத்தமாவதாகக் கிடைத்த தகவலை அடுத்து அப்பகுதியில் உள்ள படை முகாமில் இருந்த இராணுவத்தினர் கடற்கரைக்கு விரைந்து சென்று தேடுதல் நடத்தினர். அச்சமயம் அவர்கள் மீனவர்கள் போதையில் கிடப்பதைக் கண்டனர்.

புலிகளை எதிர்பார்த்து வந்த படையினர் மீனவர்களைக் கண்டு ஏமாறினர். அவர்களை நெருங்கி நோட்டமிட்ட பின்னர் அங்கிருந்து திரும்பினர். அச்சமயம் போதையில் இருந்த மீனவர்களில் ஒருவர் தகாத வார்த்தைகளால் சிப்பாய்களை ஏசினார் என்றும் —

அதனால் ஆத்திரமடைந்த படையினர் திரும்பி வந்து அவ்வாறு ஏசியது யார் எனக் கேட்டு மீனவர்களைத் தாக்கியதாகவும் —

மீனவர்கள் எவருமே உண்மையைக் கூறாததால் அவர்கள் அனைவரையும் மறுநாள் முகாமுக்கு வந்து உண்மையைக் கூறுமாறு படையினர் உத்தரவிட்டுச் சென்றதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

மறுநாள பய பீதியுடன் பனிச்சங்கேணி முகாமுக்குச் சென்ற மீனவர்கள் அங்கு வைத்தும் உண்மையைக் கூற மறுத்ததை அடுத்து அவர்கள் அனைவரது தலைமயிரையும் படையினர் மழித்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலையின் உச்சிப் பகுதியில் மட்டும் சிறிது தலைமயிர்க் கற்றைகளை விட்டு எஞ்சிய மயிர் முழுவதையும் அழகாக மழித்து விட்டனராம் சிப்பாய்கள் (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வுமுயற்சிக்கு பெண்களின் ஆதரவை கோருகிறார் ஜனாதிபதி

## மகளிர் தின விழாவில் உரை

கொழும்பு, மார்ச் 9

இலங்கையில் இழுபறி நிலையில் உள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அரசியல் முயற்சிகளுக்கு நாட்டில் உள்ள அனைத்துப் பெண்களும் ஆதரவு வழங்க வேண்டும்.

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்க பதுளை வின்சன்டயஸ் அரங்கில் நேற்று நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினையை அரசியல் ரீதியில் தீர்த்து வைப்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்தை பல்வேறு குழுக்கள் எதிர்த்து வருகின்றன. எவ்வாறாயினும் சகல சமூகங்களுக்கும் இடையில்சமாதானத்தையும் சுபீட்சத்தையும் அரசியல் வழியில் கொண்டு வருவதற்கு எனது அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்கு அரசாங்கத்தின் யோசனையை அமுல் செய்ய பெருமளவில் பெண்கள் உதவ வேண்டும்,

ஜனாதிபதி இவ்வாறு மேலும்தெரிவித்தார். (ஐ-6)

## சூட்டு சம்பவத்தை கண்டித்து

# நீதிமன்ற பணியாளர்கள் வவுனியாவில்ஆர்ப்பாட்டம்

வவுனியாவில் மாவட்ட நீதிவான் தங்கியிருந்த அறை மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து வவுனியா நகரில்நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வவுனியா நீதிமன்ற நீதிவான்கள், பதிவாளர்கள், ஊழியர்கள், சட்டத்தரணிகள் அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர். இதனால் நீதிமன்ற நடவடிக்கைகள் யாவும் நேற்று முற்றாகச் ஸ்தம்பித்தன.

நீதித்துறையினரின் பாதுகாப்பைத் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்த வேண்டும் என்றும்— அதுவரை தாங்கள் தொடந்து போராட்டம் நடத்தப் போவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்-

நண்பகல் அளவில் படை அதிகாரிகளும், பொலீஸ் அதிகாரிகளும் நீதிவான்களுடன் பேச்சு நடத்தி அவர்களின் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததை அடுத்து நண்பகல் ஒரு மணியளவில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

மாவட்ட நீதிவானின் அறைமீது தாக்குதல் நடத்தியோரை அடையாளம் கண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதிப் பொலீஸ்மா அதிபர் லக்கி ஜெயவர்த்தன தெரிவித்தார்.

வவுனியா வாடி வீட்டில் மாவட்ட நீதிவான் தியாகேந்திரன் தங்கியிருந்த அறைமீது கடந்த சனியன்று இரவு இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு நடத்தியது தெரிந்ததே. (ஐ - 6 - 164)


BARATHY
சித்தன்கேணி.
98 A/L DAY
PAPER CLASS
அளவையியல்
R. P. சர்மா
செவ்., புதன்., வியா.
காலை 6-30 — 8-00
வரை நடைபெறுகின்றது.
(63718)

எமது
வீடியோ CD வெளியீடு!
② விண்வெளிப்பேய்
விஷ்ணு வீடியோ
துரை வீதி,
கோண்டாவில்.
(63731)

எமது
புதிய வெளியீடு!
கார்த்திக் - ரோஜா
நடிக்கும்
சின்ன ராஜா
வீடியோ
விமல்
யாழ்ப்பாணம்.
(சி/6722)

ஸ்ரீ செல்வா
சினிமா
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
கார்த்திக்
(இரு வேடம்)
ரோஜா நடித்த
சின்னராஜா
(நேரடி CD)
10-30, 2-30
(சி/6725)

எமது புதிய
வீடியோ CD
வெளியீடு!
கார்த்திக்
(இரு வேடம்)
ரோஜா
நடித்த
சின்ன ராஜா
சுப்ப ஸோ
வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/6724)

விற்பனைக்கு உண்டு
புதிய பனசொனிக் ரெலிபோன்கள்
எம்மிடம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
K.S.M. தொலைத் தொடர்பு நிலையம்
146, நவீன சந்தை யாழ்ப்பாணம்.
[வைரவர் கோயில் பின்புறம்] (63715)


### அமெ. அரசு...

(முதலாம் பக்கத் தொடர்)

காகவும் போராடுகின்ற — பல மில்லியன் தமிழர்கள் தமக்கு நீதி கிடைக்கும் என எதிர்பார்த்து அமெரிக்க நீதிமன்றத்திடம் வந்துள்ளனர்''

''விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கும் முடிவு தவறான வழியில் ஒருதலைப்பட்சமாக எடுக்கப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தால்தமக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதை அவர்களால் நிரூபிக்கக்கூடியதாக இருந்திருக்கும்''

இவ்வாறு புலிகளின் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் சார்பில் சட்டத்தரணி ஜோண் பி. சினீக்கர் ஆஜராகி வாதிட்டார்.

''கொன்றா' புரட்சியாளர்களைப் பயங்கரவாதிகள் என்று அழைக்கலாமா?''

''கொசோவாவில்நடப்பது பயங்கரவாதம் என அமெரிக்க அரசு கருதுகின்றதா?''

உள்நாட்டுயுத்தம் நடக்கும் இலங்கையில் பலாத்காரம் இல்லாமல் கலகம் இடம்பெற முடியுமா?'' என்பது உட்பட பல கேள்விகளை நீதியரசர்கள் அரச தரப்பினரிடம் எழுப்பினர்.

''பயங்கரவாதம் என்ற சொல்லுக்குவரைவிலக்கணம் மிக விரிவானது. தமது வாகனம் செல்வதற்கான பாதையைத் துப்புரவு செய்வதற்கு துப்பாக்கியைப் பயன்படுத்தினால் அதற்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவையும் பயங்கரவாத அமைப்பு என்று அறிவிக்க முடியுமே,' என்று நீதியரசர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

''அப்படி அறிவிப்பது நியாயமா?'' என்றும் அவர்கள் கேட்டனர்.

புலிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளில் ஒருவரான விஸ்வநாதன் உருத்திரகுமாரன் வாய்மூல விசாரணைகள் முடிவுற்றதாகத் தெரிவித்தார். இரு மாதங்களுக்குள் தீர்ப்பு அறிவிக்கப்படும் என்றும் அவர் சொன்னார். (உ-6)

### பூவரசங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

ய்ளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம் —

புதிதாகக் கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்கு வவுனியாவில் இருந்து வட பிராந்திய போக்குவரத்துச் சபை நேற்று முதல் பஸ் சேவையை ஆரம்பித்துள்ளது. இந்தப் பஸ் சேவை நேற்று இரணை இலுப்பைக்குளம் பகுதிவரை நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-6-21)

### சூட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

[illegible] தாகவும்—

சில செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

(ஐ-5-6-15-139-173)

# யாழ். பல்கலை ஊழியர் இன்று வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

பல்கலைக்கழக ஊழியர்களுக்கான சம்பள முரண்பாடுகள் தீர்த்து வைக்கப்படாததைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் இன்று நண்பகல் 12.00 மணி தொடக்கம் அரைநாள் வேலை நிறுத்தம் செய்யவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த வேலை நிறுத்தம் இடம்பெறவுள்ளது.

இதேவேளை—

நாட்டிலுள்ள 12 பல்கலைக்கழகங்களிலும் ஊழியர்கள் இன்று முழு நாளும் வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

மேற்படி ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டபோதும் இதுவரையும் இப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காணப்படவில்லை. [ஐ-5]

## வன்னியில் கொடும்பாவி எரிப்பு

வவுனியா, மார்ச் 9

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியில் நேற்று ஜனாதிபதி மற்றும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டதாக வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சுடரேசன் குடியிருப்பு, சந்தி குடியிருப்பு, ஐம்பது வீட்டுத்திட்டம் ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் கூடி இந்தக் கொடும்பாவிகளை இழுத்துவந்து அக்கராயன் குளம் சந்தியில் வைத்து தீமூட்டி எரித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-6-164)

### கைப்பற்றிய...

(முதலாம் பக்கத் தொடர்)

நிர்வாகத்தை இயங்க வைப்பது ஆகிய தொடர்பாக அரச அதிகாரிகள் குழு நேரில் ஆராய்ந்தது.

இவர்களின் விஜயத்தை அடுத்து அங்கிருந்த கூட்டுறவுச் சங்கக் கிளைகள் திறக்கப்பட்டு பொருள்கள் விநியோகம் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் தேங்காய் எண்ணெய், சவர்க்காரம், பால்மா, தேங்காய் ஆகியவற்றை இப்பிரதேசத்துக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-6 21-164)

### நாவற்குழி...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தச்சம்பவத்தில் சிருடையினர் சிலர் காயமடைந்ததாகவும் தெரியவந்தது.

குண்டு வெடிப்பை அடுத்து தென்மராட்சிக்கும் — யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டிருந்தது.

சாவகச்சேரிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்கள் மற்றும் வாகனங்கள் அனைத்தும் நாவற்குழிச் சந்திக்கு அப்பால் நிறுத்தி வைக்கப்பட்டு பிற்பகல் 1.15 மணிக்குப் பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டன. (ஐ5-15-173)

## மாங்குளத்தில் தொடர்ந்து ஷெல்வீச்சு

வவுனியா, மார்ச் 9

மாங்குளம்பகுதியில் இருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாக வவுனியாவுக்குக்கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை அடுத்து நட்டாங்கண்டல், பாண்டியன் குளம், கிடாய் பிடித்தகுளம் ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-6-164)

## வடக்கின் பெரும் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ். சென்ட்ரல் — சென். ஜோன்ஸ் பாடசாலை அணிகளுக்கு இடையிலான — வடக்கின் மிகப் பெரும் கிரிக்கெட் மோதல் (Battle of the North) திட்டமிட்டபடி எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் யாழ். சென்ட்ரல் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இது தொடர்பான அனுமதி கிடைத்திருப்பதாக நேற்றிரவு தெரியவந்தது.

முன்னேற்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட வட்டாரங்களுடன் நாளை பேச்சு நடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## செயலமர்வு

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 1 முதல் 6 வரையுள்ள வகுப்புக்களில் ஆங்கில பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை வேம்படி மகளிர் உயர்தர பெண்கள் பாடசாலையில் நடைபெற உள்ளது. காலை 8. 30 மணி தொடக்கம் பிற்பகல் 4 00 மணிவரை இச் செயலமர்வு இடம்பெறும். (ஐ-51)

### பொருள்களை...

(முதலாம் பக்கத் தொடர்)

ற்றப்பட்டதாகவும்—

இவைவிடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்குக் கடத்தப்பட இருந்ததாகவும்—

கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவைநோக்கி இப்படகு சென்று கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6–21)

## மக்கள் அவலம்...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரதிநிதியிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

இதே வேளை—

இந்த இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வந்துள்ள மக்கள் மல்லாவி, துணுக்காய் ஆகிய இடங்களில் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களது சுகாதாரம் மற்றும் நிவாரண விநியோகம் ஆகியன தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-6-164)

## புலிகள் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டுள்ள ஈழத் தமிழர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்—

ஈழத் தமிழர்களுக்கு நிவாரண உதவிகளை அனுப்பி வைக்க மத்திய அரசு அனுமதி வழங்கவேண்டும்—

தமிழ்நாட்டில் ஈழத் தமிழ் மாணவர்கள் கல்வி பயில வாய்ப்புக்கள் அளிக்கப்படவேண்டும் —

ஆகிய தீர்மானங்களும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. (ஐ-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09- 03 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org